Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
Tel - 0212225969
Hotline: 02122

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 14 வெள்ளிக்கிழமை (28.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 27
















# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்பு



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மறுசீரமைக்கும் முகமாக உருவாக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்க அரசு தயாராக இருப்பதாகவும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்குவதற்கு அரசு எப்போதும் தயாராக இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளீடுகளும் நிச்சயமாக கவனத்திற் கொள்ளப்படும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் விளக்கமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் திர்வுத் திட்டத்திற்கு பதிலீடு செய்யக் கூடிய வேறும் பொறிமுறைமைகள் எதுவும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அனைத்து தரப்பினரதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிவுக்குழுவின் மீது இனத்துவக் கட்சிகளின் அழுத்தம்

### சாடுகிறது லங்கா சமசமாஜக் கட்சி

(கொழும்பு)


அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மறுசீரமைப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீது இனத்துவக் கட்சிகளின் அழுத்தம் அதிகரித்து வருவதாக லங்கா சமசமாஜக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

13 ஆவது அரசியல் அமைபபுத் திருத்தம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான திஸ்ஸ விதாரண நியமிக்கப்படாமையானது அரசாங்கம் நினைத்துச் செய்த தவறில்லை என்றால், அது அரசாங்கத்தின் இனவாத சக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம் என லங்கா சமசமாஜக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில மேலும் தெரிவித்துள்ளது.

13 ஆவது அரசியல் அமைபபுத் திருத்தச் சட்டம் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு, திஸ்ஸ விதாரணவையும் பெயரிட வேண்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கலாசாரப் பிறழ்வுகளை நீக்க முடியுமா? யாழ். செயலகக் கூட்டத்தில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழில் தற்போது இடம்பெறும் கலாசாரப் பிறழ்வுகளை அடையாளம் கண்டு அவற்றை நீக்குவது குறித்து யாழ். செயலகத்தில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கான கூட்டம் நேற்று இடம்பெற்றது.

யாழ். அரச செயலக மண்டபத்தில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற இக் கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரங்கள் பகிரப்படாமல் அபிவிருத்தி இலக்கை எட்ட முடியாது



(கொழும்பு)

அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமல் அபிவிருத்தி இலக்கை எட்டுவது முடியாத காரியம் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு அமைய தான் செயற்படப்போவதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அழைக்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## குறைகேள் கருமபீடம் யூலை முதல் யாழ். செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் அரச அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பிரச்சினைகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## பஸ்கட்டண உயர்வு இப்போதைக்கு இல்லை

பேருந்து கட்டணங்களை அதிகரிப்பது குறித்து தனியார் போக்குவரத்து அமைச்சுக்கும், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்களுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் இணக்கம் இன்றி நிறைவடைந்தன. இதனால் பஸ் கட்டணத்தில் உடனடி மாற்றம் எதுவும் நிகழ்வதற் குச் சாத்தியங்கள் இப்போதைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## பாக். இராணுவத் தளபதியுடன் இன்று முக்கிய பேச்சு

(கொழும்பு)

கொழும்புக்கு விஜயம் செய்திருக்கும் பாக். இராணுவத் தளபதி இன்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார். மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் அஷ்பக் பார்வஸ் கயானி நேற்று மாலை கட்டுநாயக்க விமான



நிலையத்தை வந்தடைந்தார். இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஒரே சூலில் ஐந்து குழந்தைகள்

கண்டி, வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட மடவளையை சேர்ந்த 38 வயதான தாயொருவர் ஒரே சூலில் ஐந்து குழந்தைகளை நேற்று பிரசவித்துள்ளார். சத்திர சிகிச்சை மூலமாகவே குழந்தைகள் பெற்றெடுக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் இரண்டு குழந்தைகள் பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா தெற்கு வலய மாணவர்களின் கள ஆய்வுச் செயற்பாடு ஆரம்பம்

வவுனியா தெற்கு வலயக் கள கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு, தெற்கு வலய உயர்தர உயிரியல் பிரிவு மாணவர்களினால் பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக கள கற்கை நிலையத்தின் முகாமையாளர் ஏ. ஜெய்கீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரியல் பிரிவு மாணவர்களின் கள ஆய்வினை விருத்தி செய்யும் நோக்குடன் முதற் கட்டமாக வவுனியா தெற்கு வலயத்தின் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் 35 மாணவிகளும் வவுனியா வடக்கு வலயத்தின் புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் 12 மாணவர்களும் இக்கள ஆய்வில் ஈடுபடவுள்ளனர்.

இவர்கள் இன்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சென்று அங்குள்ள கடற்கரை சாகியத்தையும் அதனை அண்டிய பிரதேசத்தினையும் ஆய்விற்கு உட்படுத்தவுள்ளனர் என தெரிவித்தார்.

இதேவேளை, ஓமந்தை பிள்ளை நேயப் பாடசாலை செயற்பாடுகள், சிறந்த கற்றல், கற்பித்தல் சூழல் மற்றும் அறிவூட்டல் செயற்பாடுகள் தொடர்பான கல்விச் சுற்றுலா ஒன்றினை வவுனியா தெற்கு வலயக் கல்வி உத்தியோகத்தர்களும் பாடசாலை அதிபர்களும் மேற்கொளளவுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் எதிர்வரும் திங்கள் செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் திருகோணமலை, சம்மாந்துறை ஆகிய வலயப் பாடசாலைகளுக்குச் செல்லும் இவர்கள் அப் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் மற்றும் அறிவூட்டல் செயற்பாடுகளைப் பார்வையிடவுள்ளனர்.

இக்கல்விச் சுற்றுலாவில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அதிபர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு முன்பாக வலயக் கல்வி அலுவலகத்தில் தங்கள் வருகையை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## புதிய நிர்வாகத் தெரிவு

(தும்பளை)

தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் செ.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், தலைமையுரை மற்றும் கடந்த கூட்ட அறிக்கை மற்றும் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படுவதுடன், புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (62)



முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்மங்களுக்கு USAID மற்றும் ZOA நிறுவனங்களின் உதவியுடன் ரூபா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதாரப் பொதிகள் வழங்கும் வைபவம் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கான பொதிகளை வழங்கினார். (125)

## நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் முன்னிட்டு அற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாநகரசபையின் முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12.08.2013 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7.09.2013 ஆம் திகதி வரை வருடாந்த மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

## கசூரினா கடற்கரைப் பகுதியில் மதுபானம் முற்றாகத் தடை

கசூரினா கடற்கரைப் பகுதியில் மதுபாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், மதுபாவித்துவிட்டு கடற்கரைக்குச் செல்வோர் அதிகரித்திருப்பதாகவும், இவற்றுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் மேற்கொண்டுள்ளதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தற்போது அப்பகுதியில் சீருடையில் மூன்று பொலிஸாரும் இரண்டு சீருடையற்ற பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் மதுப்பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆயினும் மதுபாவித்துவிட்டு வருவோரே காணப்படுகின்றனர். ஆயினும் அவ்வாறு வருபவர்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக கசூரினா கடற்கரைக்கு வருவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், இப்பிரச்சினையும் அதிகரித்திருப்பதாக காரைநகர் பிரதேச செயலாளரினால் பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய நிலையில் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர். (இ)

## பரிசளிப்பு விழாக்கள்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தி.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

□ □ □ □ □ □

தென்புலோலி பற்றளை மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எம்.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீதரன் கலந்து கொள்ளவுள்ளதுடன், திருமதி யோகேஸ்வரி ஸ்ரீதரன் பரிசில்களை வழங்கவுள்ளார். (01)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2438 திகதி 26-06-2013

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள்

25 45 57 59

போனஸ் இல: 22

ஜக்பொட் பரிசு ரூ. 11,975,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 232433 | 20/- | 4,648,660/- |
| 2 இல | 16584 | 100/- | 1,658,400/- |
| 3 இல | 344 | 1,000/- | 344,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9263 | 40/- | 370,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 660 | 1,000/- | 660,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,975,975/- | - |
| 1 இல + போனஸ் இல | 10989 | 100/- | 1,098,900/- |
| 2 இல + போனஸ் இல | 517 | 500/- | 258,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 454 | 200/- | 90,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 271278 | | 11,029,280/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜுன் 29 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 12,610,125/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/2889)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்







சுகாதாரப்பணி உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில், 14.06.2013 வெள்ளிக்கிழமை அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எமக்குரிய நியமனத்தினைப் பெற்றுத் தந்தமைக்காக

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும்
ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்களுக்கும்
யாழ்.மாவட்ட அமைப்பாளர்
கந்தசாமி கமலேந்திரன் அவர்களுக்கும்
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம் வாழ்த்துவோர்
2013.06.14 இல் நியமனம் பெற்ற சுகாதாரப் பணியாளர்கள்
யாழ்.மாவட்டம்

(R/196)




சுதேச பாரம்பரிய வைத்தியத்துறையில் கடந்த 28 வருடங்களுக்கு மேலாக மகத்தான சேவையாற்றி வரும் மட்டுவிலைச் சேர்ந்தவரும், தற்போது நவாலியில் வைத்திய சேவையாற்றிவரும் லியோன் புஸ்பராணி சுதேச வைத்திய அமைச்சினால் பாராட்டப்பட்டு, பதக்கமும், சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (104)

# பாசையூர் இறங்குதுறை புனரமைப்பு

# மீனவர்களுக்குச் சிறந்த வரப்பிரசாதம்

## அவுஸ்ரேலிய தூதுவர் றொபின்மூடி



(யாழ்ப்பாணம்)

பாசையூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி ஐம்பத்தெட்டு மில்லியன் ரூபா செலவில் ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் ஊடாக பாசையூர் இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்வதற்கு உதவியதையிட்டு அவுஸ்ரேலிய அரசாங்கம் பெருமை கொள்கின்றது என்று இலங்கைக்கான அவுஸ்ரேலியத் தூதுவர் திருமதி றொபின் மூடி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாசையு,ரில் புன்ரமைக்கப்பட்ட அப்பகுதி மீன்பிடி இறங்குதுறையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்துறையில் உட்கட்டுமான வசதிகள் சேதமடைந்தும் பாவிகக முடியாதவாறும் இருந்த தினால் தான் மக்கள் தமது தொழிலை மேம்படுத்த முடியவில்லை என்பதனை நான் கண்டு கொண்டுள்ளேன்.

இவ்வாறு பிரச்சினைகளை எதிர்கொண்டே மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதனைப் புரிந்து கொள்ள முடிந்ததினாலேயே அவுஸ்ரேலிய மக்களிடம் கலந்து திட்டமிட்ட இந்த நிதியைக் கொண்டு பாசையூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த இறங்கு துறையைப்புனரமைப்புச் செய்து வழங்க அவுஸ்ரேலிய அரசாங்கம் முன்வந்தது.

வடமாகாணத்தில் 32 ஆயிரம் மீனவக்குடும்பங்கள் வாழ்கின்றனர். அதில் அறுபது வீதம் யாழ். மாவட்டத்திலேயே வாழ்கின்றனர். எனவே அவுஸ்ரேலிய அரசாங்கம் ஐ.ஓ.எம் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்திற்கு 58 மில்லியன் ரூபாவை அதாவது 456ஆயிரம் அவுஸ்ரேலிய டொலர்களைச் செலவு செய்துள்ளது.எனவே இத்திட்டத்தில் இருந்து எவ்வளவு பலனைப் பெறமுடியுமோ அவ்வளவு பயனைப் பெற்றுக் கொள்வதோடு இந்த இறங்குதுறையையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் இங்குள்ள சமூகமட்ட அமைப்புக்களிடையேயான ஒருங்கிணைப்பைப் பார்க்கும் போது சந்தோஷமாகவுள்ளது என்றார்.

பிரதேச செயலாளர் மீன்பிடிச்சங்கத்தின் மற்றைய சமூகமட்ட அமைப்புக்கள், கடற்படை மீன்பிடித்துறை, மாநகர சபை போன்றவற்றையும் குறிப்பிட்டுப்பேசிய அவர் 2006 ஆம் ஆண்டில் இருந்து ஐ.ஓ.எம் நிறுவனத்துடன் இணைந்து இவ்வாறான திட்டங்களை அவுஸரேலிய அரசாங்கம் செயற்படுத்தி வருவதாகவும் அவா தெரிவித்தார். (பா)

# காசோலை கையளிப்பு



புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க சபை உறுப்பினர்களிடம் காசோலை கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி இந்நிகழ்வில் கலந்து கொண்டு புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் புனரமைக்கப்படுவதற்கான காசோலையை வழங்கினார்.

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே இக்கடன் வழங்கப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இலகு கடன் அடிபபடையில் ரூபா 2 மில்லியனை வழங்கியுள்ளது. இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் மதுமதி வசந்த குமார், புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# முஸ்லிம் ஊடக அமையத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடக அமையத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொள்ளுப்பிட்டியிலுள்ள ரண்முத்து ஹோட்டலில் என்.எம்.அமீன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம அதிகாரியாக சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ, சிறப்பு பேச்சாளராக ஜாமி ஆ. நளீமியா, கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

விசேடமாக ஊடகத்துறைக்கு சேவையாற்றிய பின்வருவோர் கௌரவிக்கப்படவுள்ளார்கள். “மவ்பிம” செய்தி ஆசிரியர் பெனட்ரூபசிங்க, உதயன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன், தினக்குரல் பத்திரிகையாளர் எம்.ஏ.ஏம் நிலாம் ஊடகவியலாளர் ஏ.எம்.வைஸ், ஏ.எம்.ஏ.பரீத் ஆகியோருடன் முஸ்லிம் நிதிய நூலாசிரியர் சட்டத்தரணி கருணாரத்னஹேரத், செய்யத் அகமட் (ஜாமாதே இஸ்லாம், டொமினிகன் குடியரசின் இலங்கைக்கான கவுன்சிலர் அல்ஹாஜ் ஹபீபுல்லா, கலாநிதி எம்.ஏ.எம்சுக்ரியும் கௌரவிக்கப்படவுள்ளாாகள்.

மாலை அமர்வில் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறும் என்.எம்.அமின் புதிய தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுச் செயலாளர் பதவிக்கு ரஷித், எம்.ஹபீல், ரீப்தி அலி, பொருளாளர் பதவிக்கு எச்.எம.பாயிஸ் மீரா, இஸ்ஸதீன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். (105)

# பொது அறிவுப்போட்டியில் 5 மாணவர்கள் தெரிவு

(நல்லூர்)

சமுர்த்தி அதிகாரசபையினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் ச்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு சமுர்த்திச் செயலணியினரால் இவ்வருடம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்விபயிலும மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

சரியான விடைகளை எழுதியோரில் குலுக்கல் மூலம் பரிசுக்குரிய ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தலைமையில் இடம் பெற்ற குலுக்கல் தெரிவின் போது தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம் வருமாறு,

பிரபாகர் மிறோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), சுபராஜா விஷ்ணுகாந் (யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), தேவகுமாரன் ரஜிந்தன் (யாழ் இந்துக் கல்லூரி), க.கனன் ஜெயன் (யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தி.), விக்கினேஸ்வரன் மதுரங்கா (யா.வேம்படி உயர்தர பாடசாலை.) வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் விரைவில வழங்கப்படுமென நல்லூர் வடக்கு சமுர்த்தி செயலணியினர் அறிவித்துள்ளனர்.

# சிறுவர்பாடல் நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் தென் புலோலியூர் பரா ரமேஸின் “அன்புப் பிள்ளைகளே” சிறுவர் பாடல் நூல் வெளியீடு இறுவெட்டு, வெளியீட்டு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், இளைப்பாறிய மாவட்ட ந்திபதி முதிருநாவுக்கரசு முதன்மை விருந்தினராகவும், வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்தில்லைநாதன், புற்றளை மகா வித்தியாலய அதிபர் எம்.அனந்தேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். நூல் வெளியீட்டுரையை கவிஞர் பெரிய ஐங்கரன், நயப்புரையை கலாநிதி பண்டிதர் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கவுள்ளனர். (01)

# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் தங்களுக்கான மாகாண சபை பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வழிமுறை பற்றித் தீமானிப்பதற்கான வெளிப்படையான பகிரங்க ஆலோசனைக் கூட்டம் மக்கள் மறுமலர்ச்சி முனனணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வ்தியிலுள்ள மீராப்பிள்ளை ஹாஜியார் ஒழுங்கையில் இடமபெறவுள்ளது. இக் கூட்டத்தில் எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ளவர்களை கட்சி வேறுபாடுகளின்றி கலந்து கொள்ளுமாறும் மேலும் சமூக அக்கறையுள்ளவர்களையும் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.எம்.மனாப்தீன் அழைப்பு விடுத்துள்ளார்.

# மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களாக கிளி. பூநகரியில் 22 பேர் தெரிவு



(முழங்காவில்)

பூநகரி பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினாகளாக நீதி அமைச்சால் நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 22 உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வும், சின்னம் சூட்டும் வைபவமும் நேற்று முன்தினம் புதன்கிழமை பூநகரி மட்டுவில் நாடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பூநகரி, முழங்காவில், நாச்சிக்குடா பொலிஸ் நிலையப் பொறுபதிகாரிகள் கலந்து சிறப்பித்ததுடன் மத்தியஸ்தர் சபை சம்பநதமான விளக்கங்களையும் அளித்தனர். நிகழ்வின் ஆரம்பத்தில் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த மும்மதக் தலைவர்களால் ஆசியுரை வழஙகப்பட்டது. இவ் வைபவத்தில் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த சகல கிராம சேவை அலுவலர்களும் கலந்து சிறப்பித்தனர். (112)

## இசை நிகழ்வு பிற்போடப்பட்டது

பருத்தித்துறை இசைவானம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவிருந்த இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தொலையும் விளையாட்டுகளும் குழந்தைகளும்!

இன்றைய சிறுவர்கள் வெளியில் சென்று விளையாட ஆர்வப்படுவதைக் காண்பதே அரிதாக இருக்கிறது. இவர்களை இருபது முப்பது வருடங்களுக்கு முன்பிருந்த சிறுவர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! பின்னேரமானால் அம்மாவிடம் என்னென்ன பொய்த் தந்திரங்களெல்லாம் செய்து – சொல்லி வெளியே விளையாட ஓட வேண்டும். காலையிலிருந்து அம்மா சொல்லும் வேலைகளையெல்லாம் நல்லபிள்ளையாகச் செய்துமுடித்துவிட்டு மாலையானதும் என்னவிதமாகவும் உச்சிவிட்டு மைதானத்துக்கு ஓட மனம் பரபரக்கும்.

இன்றைய சிறுவர்கள் எந்நேரமும் கார்ட்டூன் சனலைப் பார்த்துக்கொண்டு தொலைக்காட்சியை விட்டுத் தாண்டாமல் அமர்ந்திருந்திருப்பதையே பார்க்க நேர்கிறது. விளையாட்டென்றால் கம்ப்யூட்டரிலோ தொலைக்காட்சியிலோ 'வீடியோ கேம்ஸ்' விளையாடததான் பலருக்கும் பிடித்திருக்கிறது. முன்பெல்லாம் ஓர் அறைக்குள இருந்து விளையாட முடியுமென்றோ அதை விளையாட்டு என்றோ நினைத்துப் பார்த்திருக்கிறோமா?

யாரும் அப்போது சிறுவர்களை விளையாடப் போ என்று சொனனதில்லை. சூரியன் மறைந்து இருண்டாலும் வீட்டுக்கு வராமல் அவர்கள் விளையாடிக்கொண்டிருப்பதைத் தடுக்கவும் முடிந்ததில்லை. என்ன விளையாடுவது என்று யோசித்துப் பார்த்ததெல்லாம் இல்லை. வயதொத்த சிறுவர்கள் கூடிவிட்டால் போதும். விளையாட்டுகள் தானாக உருவாகிவிடும். ஓடிப்பிடித்து விளையாடுவது, கள்ளன் பொலீஸ், கெந்தி மிதித்தல் (மாங்கொட்டை போடுதல்), நாயும் இறைச்சித்துண்டும், கபடி, வாரோட்டம், கிளித்தட்டு, கிட்டிப் பெல்லி, மாபிள் அடித்தல், பட்டம் ஏற்றுதல் என்று எத்தனையெத்தனை வகைகளில் விளையாட்டுக்கள்!

குழந்தைகளுக்குப் படிப்பைவிட விளையாட்டு என்பது மிகவும் முக்கியம் என்று குழந்தைகளின் உளவியலாளர்கள் சொல்கிறார்கள். ஆனால் இன்று பெற்றோரும் கூட குழந்தைகளை விளையாடச் சொல்வதில்லை. காலையில் எழுந்து குளித்து வெளிக்கிட்டால் நேரே பள்ளிக்கூடம். பள்ளிக்கூடம் விட்டதும் எப்படியும் ஒன்றோ இரண்டோ 'ரியூஷனுக்கு' அவர்கள் சென்றாக வேண்டும். ஏழு மணிக்கோ எட்டு மணிக்கோ வீடு திரும்பியதும் முகம் கைகால கழுவிக்கொண்டு ஒன்பது மணி வரைக்கும் படிப்பு. இதைவிட அவர்களை நாம் வேறென்ன செய்ய விடுகிறோம் சொல்லுங்கள்?

கண்டிப்பாகப் பெற்றோர்களுடையதும் சமூகத்தினுடையதும் தவறுதான் இது. இதில் தொலைக்காட்சி ஒரு முக்கிய வில்லனாக வீட்டிலேயே இருக்கிறது. குழந்தைகளை வெளியில் அழைத்துச் சென்று மரம் செடி கொடிகள், பறவைகள், இயற்கைக் காட்சி என்று எதுவும் காண்பிக்க நமக்கு நேரமிருப்பதில்லை. குழந்தைகள் படிக்க வேண்டும், படித்து என்ஜினியராகவோ டொக்டராகவோ ஆகிப் பெரும் பணம் ஈட்ட வேண்டும். சம்பாதித்தால் போதும். அதறகுப் படிப்புதான் முக்கியம், விளையாட்டெல்லாம் முக்கியமல்ல. இபபடி படிப்பைத் தவிர வேறு எதுவும் தெரியாத குழந்தைகளைத்தான நாமும் வளர்க்க விரும்புகிறோம் இல்லையா?

ஒரே சமயத்தில் நம்முடைய குழந்தைகளையும், காலம்காலமாக நாம் விளையாடிவந்த அற்புதமான விளையாட்டுக்களையும் இழந்துகொண்டிருக்கிறோம். இரண்டு விஷயங்களையும் காப்பாற்ற பெற்றோராலும் இந்தச் சமூகத்தாலும் மட்டும்தான் முடியும். நேரமுள்ள நேரமெல்லாம் குழந்தைகளை வெளியே அழைத்துக் கொண்டு போய் இது மைனா, இது இரட்டைவால் குருவி, இது தொட்டாச்சிணுங்கி இது தூக்கணாங்குருவிக் கூடு என்றெல்லாம் காட்டலாம். தொலைக்காட்சியை அணைத்துவிட்டுக் குழந்தைகளுக்குக் கதை சொல்லலாம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வளரும் குழந்தைதான் கற்பனைத் திறனும் புத்திசாலித்தனமும் கொண்டவையாக வளரும் என்பது திரும்பத்திரும்ப நிரூபிக்கப்பட்ட உண்மை. ஆனால் இதற்கு யார் யார் தயாராக இருக்கிறோம் சொல்லுங்கள்.

- ஆசிரியர்

# தீர்வு வழங்கப்படாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

## வைத்திய சேவைச்சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக பரிபூரண வைத்திய சேவை தொழிற் சங்க ஒன்றிணைந்த சபை தெரிவித்துள்ளது.

4 கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொள்ளப்படவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு சுகாதார அமைச்சின் செயலாளருடைய எழுத்து மூலமான வாக்குறுதியால் கைவிடப்பட்டதாக அந்தச் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் நான்கு கோரிக்கைகளில் மூன்றை நிறைவேற்ற அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பிரச்சினைக்கு தீர்வு வழங்க இரண்டு வார கால அவகாசம் வழங்குவதாகவும் அதற்குள் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் பரிபூரண வைத்தியசேவை தொழிற் சங்க ஒன்றிணைந்த சபை தெரிவித்துள்ளது.

# விபத்துக்கள் ஏற்படக்காரணம் "காப்பற்" வீதியில் அதிவேக பயணமே!

(அச்சுவேலி)

தற்போது குடாநாட்டில் உள்ள பல வீதிகளும் புனரமைக்கப்பட்டு "காப்பற்" போடப்பட்டுள்ளது.இதனால் வாகன சாரதிகள் அதிக வேகத்துடன் பயணிப்பதாக பாதசாரிகளாலும் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்போராலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக மோட்டா சைக்கிளில் பயணம் செய்யும் இளைஞர்களே கூடுதலாக இவ்வாறு வேகக்கட்டுப்பாட்டை மீறி அதிவேகத்துடன் போட்டி போட்டுக் கொண்டு பயணிக்கின்றனர். இவர்கள் மூலை முடக்குகள் என்றில்லாது சனநெரிசலும் வாகன நெரிசலும் அதிகமுள்ள இடங்களில் கூட வேகத்துடனேயே பயணிக்கின்றனர் இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், பாதசாரிகள் வீதியைக் கடக்க முற்படும் வேளையில் அச்சத்துடனேயே கடக்கின்றனர். அத்துடன் பாடசாலைக்குச் செல்லும் போதும் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் வேளையிலும் மாணவர்களும் இவ்வாறு அதிக வேகத்துடன் பயணிக்கும் மோட்டார் பயணிகளால் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர். அத்துடன் சில வீதிகளில் காப்பற் போடப்பட்டும் இன்னும் வீதி சமிஞ்ஞைக் குறியீடுகள் இடப்படவில்லை எனவும் இவையும் விபத்துக்கள் ஏற்படக் காரணம் எனவும் பயணிகள விசனம் தெரிவிக்கின்றனர். எனவே இவ்வாறு வேகக்கட்டுப் பாட்டை மீறி பயணிப்போர் ஓரளவேனும் தமது வாகனங்களின் வேகத்தைக் குறைத்து. ஏனைய பயணிகளின் நலனையும் கருத்தில்கொண்டு செயற்பட்டால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (85)

# கே.பி, தயா மாஸ்டரையே அரசாங்கம் வென்றுள்ளது

## தமிழ் மக்களை அல்ல என்கிறது ஜே.வி.பி.

கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மற்றும் தயா மாஸ்டர் ஆகியோரை மட்டும் அரசாங்கம் வென்றுள்ளதே தவிர, வடக்கில் வாழும் தமிழ் மக்களின் இயத்தையும் உள்ளத்தையும் வெற்றி கொள்ளத் தவறிவிட்டது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

எந்தவொரு நோக்கத்தையும் நிறைவு செய்யாத நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதி நியமிக்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் உறுதி செய்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதற்கு பதிலாக சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஒரு தொகுதி ஆலோசனைகளை முன்மொழியவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

# பாராட்டு விழா

(பருத்தித்துறை)

புலோலி தென்மேற்கு பிரிவிலுள்ள கிராம மக்களும் தீபஜோதி சனசமூக நிலையமும் சிவில் பாதுகாப்புக் குழுவும் இணைந்து நடத்தும் பாராட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தீபஜோதி சன சமூகநிலையத்தில் கந்த முருகேசனார் சன சமூக நிலைய செயலாளர் மு. ஜெயதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி நந்தகுமார வீரவர்த்தன, பருத்தித்துறை பொலிஸ் உத்தியோகத்தர் சிவயோகி சிவசுபேந்திரன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வரவேற்புரையை தீபஜோதி சனசமூக நிலையத்தலைவர் தி.ஜீவரட்ணம் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் க.யோகநாதன் பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் பூ. சஞ்சீவன், ஊடகவியலாளர் ஏ.என்.எஸ். திருச்செல்வம், வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் உட்படப் பலர் வழங்கவுள்ளனர். (109)

# வேம்படி மகளிர் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையின் 175 ஆவது ஆண்டு விழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளதுடன் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கலை நிகழ்வுகளும் பாடசாலையின்தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று பிற்பகல் 1 மணிக்கு கலைகலாசார நிகழ்வுகள் பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன், கௌரவ விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண திறனாய்வாளர் திருமதி மதிவாணி விக்னராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் குழு நடனம், பேச்சு நாட்டிய நாடகம், நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 29 ஆம் திகதி ஸ்தாபகர் தின நிகழ்வு காலை 8 மணிக்கு விழாக் குழுத்தலைவர் டாக்டர் திருமதி சிவமதி சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பணிப்பாளர் திருமதி ராணிமலர் ஜெயசோதி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருது வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# தமிழ் மொழித்தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வடமாகாண தமிழ் மொழித்தின விழா இன்று பிற்பகல் 1.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடமபெறவுள்ளது.

இன்றைய இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ். பல் கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் சி.விசாகரூபன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# மண்ணைப் பொன்னாக்கும் விவசாயம்

■ ஆர்.எஸ்.நாராயணன்

பூமாதேவியே என்னை மன்னித்துவிடு.
உன் மண்ணை நான் உழும்போதும்,
காளைகள் நடக்கும் போதும்
கொழுவால் உன்னைக் கிளறும் போதும்
வலியைப் பொறுத்தருள்க.
நல்ல விளைச்சலை வழங்கி
மனிதர்களைக் காப்பாற்று

கி.பி.800இல் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் "காஷ்யபர் க்ருஷி சுக்தி" என்ற விவசாய இலக்கியத்தில் காஷ்யபமுனிவர் மண்ணின் மீது தான் ஏரோட்டம் செய்யும் போது மண்ணிற்கு வலிக்குமே என்று கவிபாடியுள்ளார். மண்ணின் மீது நமது முன்னோர்கள் கொண்டிருந்த அன்புக்கு வேறு சான்று தேவை இல்லை.

கி.பி.2013இல் வாழும் நாம் மண்ணை நேசிப்பதனை மறந்து மண்ணை மாசுகளால் புண்ணாக்கி விட்டோம். இரசாயனங்களைக் கொட்டி மலடாக்கிவிட்டோம். விஷ உணவை உற்பத்தி செய்து விஷத்தை உண்டு உடலும் மனமும் விஷமான மனிதனுக்கு வாழ்க்கைப் பார்வையும் போய் கருத்துக்குருடன் ஆகிவிட்டான். விஷமான மனிதர்கள் வாழ்க்கைப் பார்வை இல்லாததால்தான் இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளைப் புறக்கணிக்கின்றனர். செலவு குறைந்த இயற்கை விவசாயத்தைப் புறக்கணித்துவிட்டுச் செலவை உயர்த்தும் இரசாயனத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

நகரங்களில் வாழும் மக்களுக்கு நமது உணவு எப்படி விஷமாகிறது என்ற அடிப்படை புரியாமல் வாழ்கிறார்கள். கிராமங்களில் வாழ்பவர்கள் குறிப்பாக விவசாயிகளில் பலர் இவையெல்லாம் விஷம் என்ற புரிதல் இல்லாமல் யூரியாவையும் இதர இரசாயனங்களையம் பலதரப்பட்ட பூச்சிமருந்துகளையும் பயன்படுத்துகின்றனர்.

பூச்சிமருந்தல்ல அவை. விஷமான உயிர்கொல்லிகள் அவை. "பூச்சிமருந்து குடித்து இறந்து போனான்" என்ற செய்தியின் வாயிலாக அதை அறிந்து கொள்ளலாம். ஏன் அவற்றை விஷம் என்று கூறுகிறோம்? நமக்கெல்லாம் நோய்வந்தால் மருத்துவரிடம் சென்று மருத்துவரின் அறிவுரைப்படி மருந்து எடுத்துக் கொள்வோம். ஒரு சிலர் பழைய மருந்துச் சீட்டைக் காட்டி அவர்களே கடையில் மருந்து வாங்கி உண்பதைப்போல், எல்லா விவசாயிகளும் அவர்களே மருத்துவர்களாக மாறி அவரவர் நோக்கத்திற்குப் பூச்சிமருந்து தெளிக்கும் பழக்கம் வேரூன்றியுள்ளது. அல்ட்ரின், டி.டி.ட்டி., லின்டேன், ஹெப்டோக் குளார், என்ட்ரீன், டையாகினான், அலுமினியம், பொஸ்பைற், மலத்தியோன், பரத்தியோன் என்ற பெயர்களில் நூற்றுக் கணக்கான மருந்துகள் உண்டு. ஒன்றை தடை செய்தால் மாற்று என்ற பெயரில் புதிய லேபிளில் புதிய பூச்சிமருந்து விற்பனைக்கு வந்து விடும்.

இப்படிப்பட்ட எல்லாவிதமான பூச்சி மருந்துகளிலும் ஆர்மோ குளோரின், ஆர்கோபொஸ்பைற் போன்ற விஷயங்கள் உள்ளன. இப்படிப்பட்ட பூச்சிமருந்துகள் சாதாரணமாக அடித்த சில மணிநேரங்களில் ஆவியாகி விடும் என்றும் இதனால் எதுவும் தீமை இல்லை என்றும் பலர் நம்புவதுண்டு. ஆவியாவது சரியே. அடிக்கப்படும் மருந்தால் தீமை செய்யும் பூச்சி பூசணங்கள் மடிவதும் சரியே. ஆனால் பக்கவிளைவுகள் பயங்கரமானவை. பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளும், பறவைகளும் அழிகின்றன. இயல்பான மகரந்தச் சேர்க்கை பாதிப்புறுகிறது. பயிர்மீது அடிக்கப்படும் மருந்து மண்ணில் விழுந்து மண் விஷமாகிறது. பயிர்களின் தண்டுகள் வழியே ஊடுருவிப்பாய்ந்து காய்கறி, பழங்கள், தானியங்களில் அந்த விஷம் எஞ்சி நிற்கிறது. "ஒரு துளி விஷம்" என்பது அந்தக் காலம். மில்லியனில் இருபது பங்கு, முப்பது பங்கு நாற்பது பங்கு என்பது இந்தக்காலம். சாதாரணமாக அனுமதிக்கப்படும் அளவு என்ற கணக்கு உண்டு. ஒவ்வொரு வகையான விஷமும் நமது உடலில் அனுமதிக்கப்படும் அளவில் செல்லும்போது பிரச்சினை இல்லை. மேற்கூறியபடி அனுமதிக்கப்படும் அளவு மில்லியனில் பத்துப்பங்கு என்றால் நாம் உண்ணும் இரசாயன விவசாய உணவுகளில் இத்தகைய விஷம் இவ்வாறு அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் நூறு முதல் 200 சதவீத அளவுக்கு அதிகம் உள்ளதாக பரிசோதனைக்கூட முடிவுகள் தெரிவிக்கின்றன.

**கி.பி.2013இல் வாழும் நாம் மண்ணை நேசிப்பதனை மறந்து மண்ணை மாசுகளால் புண்ணாக்கி விட்டோம். இரசாயனங்களைக் கொட்டி மலடாக்கி விட்டோம். விஷ உணவை உற்பத்தி செய்து விஷத்தை உண்டு உடலும் மனமும் விஷ மான மனிதனுக்கு வாழ்க்கைப் பார்வையும் போய் கருத்துக்குருடன் ஆகிவிட்டான்.**

**பூச்சிமருந்துகள் சாதாரணமாக அடித்த சில மணிநேரங்களில் ஆவியாகி விடும் என்றும் இதனால் எதுவும் தீமை இல்லை என்றும் பலர் நம்புவதுண்டு. ஆவி யாவது சரியே. அடிக்கப்படும் மருந்தால் தீமை செய்யும் பூச்சி பூசணங்கள் மடிவதும் சரியே. ஆனால் பக்கவிளைவுகள் பயங்கரமானவை.**

இரசாயனம் - பூச்சிமருந்து விவசாயத்தால், நாம் உண்ணும் பழங்கள், காய்கறிகள், தானியங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் எஞ்சியுள்ள் விஷம் நமக்கு ஏற்படும் நோய்களின் பட்டியல் நம்மை தலை சுற்றவைக்கும். ஆர்கோகுளோரின் கலந்த உணவு மூலம் வயிற்றுப்போக்கு, ஈரல்-குலை நோய், மூத்திரப்பை அடைப்பு, பித்தப்பை அடைப்பு, சிறுநீரகத்தில் கல், கொலரா, புற்றுநோய் என்பன ஏற்படும். ஓர்கனோ பொஸ்பரஸ்விஷத்தினால் பல்வேறு வாதநோய்கள், நரம்புமண்டலக் கோளாறு, உடல் வலி, புற்றுநோய், இதயவலி வரும். யூரியா உரம் போட்டு வளர்த்த உணவு மூலம் இரத்தசோகை ஏற்படும்.

இப்போது மண் பற்றி பார்க்கலாம். இரசாயன உரமிடுவதாலும், பூச்சி மருந்து பூமியில் விழுவதாலும் மண் விஷமாகிறது. இரசாயன உரமிடுவதன் மூலம் மண்ணில் உள்ள அனைத்து உயிர்ச்சத்துக்களும் மிகவேகமாகச் சுரண்டப்படுகிறது. ஆகவே நல்ல நிலையில் உள்ள நன்னிலம் களர்நிலமாக மாறுகிறது. மண் இறுக்கமாகிறது. சில சமயம் உவ்ராகவும் மாறுகிறது. களரைத் திருத்தலாம், உவரைத் திருத்த முடியாது. அந்தக் காலத்தில் ஒட்டுமண் என்பார்கள். சவர்க்காரத்திற்குப் பதிலாக வெள்ளையாக உள்ள உவர்மண் துணி வெளுக்கப் பயனாயிற்று. விளைநிலம் அப்படி மாறிவிடும்.

விவசாயத்திற்கு இலக்கணம் எழுதிய கார்ஷ்யபர் (கி.பி.800) மண்ணை மேதினி என்கிறார். மேதினி என்றால் வளமை, செழுமை, முழுமை என்று பொருளுண்டு. மேதினிக்கு காஷ்யபர் வழங்கும் பொருள் விளக்கமாவது: "மனிதனுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், பல்லுயிர்களுக்கும், உணவைத் தருவதால் மண் மேதினி.

மண்ணில் நோய்தீர்க்கும் மூலிகைகள் விளைவதால் மேதினி. மண் உயிர்க்காற்றாகிய ஒட்சிசனை உள்ளடக்கிய நீருற்றுகளை வழங்குவதால் மேதினி".. மேதினி என்ற இச்சொல் பிற்கால வழக்கில் "மேனி" ஆனது. விவசாயத்தில் மேனி என்றால் "விளைச்சல்" என்று பொருள். மேதினியை பூமியின் மேனி என்று பொருள் கொள்ளலாம்.

மொத்தப்புவியின் நிலப்பரப்பில் உள்ள விளைநிலமே மேதினி. இந்த மேதினியை நாம் பாழடித்தவண்ணம் உள்ளோம். இரசாயன உரமிட்டும், பூச்சிமருந்து அடித்தும் நஞ்சாக்கிவிட்டோம். பொன்னான பூமி (மேதினி) புண்ணாகிவிட்டது. இதற்கு வைத்தியம் செய்யவேண்டும். என்ன செய்யலாம்? "ஆறு மனமே ஆறு, ஆண்டவன் கட்டளை ஆறு" என்று பாடிய கவிஞனை நினைவில் கொண்டு இந்த ஆறு கட்டளைகளை நிறைவேற்றினால் மேதினி சிறக்கும்.

1. மண்ணை வளர்க்க மண்புழுக்களை வளர்க்க வேண்டும்.

2. மண்புழுக்களை வளர்க்க மாடுகளை வளர்க்க வேண்டும்.

3. மேதினி வளர பசுக்கள் வழங்கும் ஐம்பொருள்களான கோ மலமாகிய சாணி, கோ ஜலமாகிய மூத்திரம், ஆவின் பால், ஆவின் நெய், ஆவின் மோர் கலந்த் பஞ்சகவ்யத்தால் மேதினியை சுத்தி செய்ய வேண்டும்.

4. மேதினி வளர வரப்புகளிலும், புஞ்சைகளிலும், மேய்ச்சல் காடுகளிலும் மரம் வளர்க்க வேண்டும். மரம் உதிர்க்கும் சருகுகள் பயிர்களுக்கு முழுமையான ஊட்டம் தருவதால் மேனி (விளைச்சல்) பெருகும்.

5. மேதினி வளரக் குப்பை வேண்டும். எல்லா வகையான அறுவடைக்கழிவுகளிலும் மாடுகள் தின்ற மிச்சங்களும் கால்நடைக் கழிவுகளுடன் சேர்த்து கம் போஸ்ட் செய்யலாம். காய்கறிப் பயிர்களுக்கு வைக்கோல் அல்லது மரச்சருகுகளால் மூட்டாக்குப் போடலாம். கம்போஸ்ட் , மூடாக்கு ஐந்தாவது கட்டளை.

6. சுரபாலனின் விருட்சாயுர்வேதநூல் கூறிய வண்ணமாக அல்லது காலத்திற்கு ஏற்ப நடைமுறைச் சாத்தியமான குணபக்கூறுகளை மண்ணில் இடவேண்டும். குணபம் என்றால் உயிரற்ற உடல் என்று பொருள், எலிகுணபம், மீன் குணபம், பன்றி குணபம், என்று பலவகை உண்டு. பலவகையான குணபஜலத்தைப் பாலில் கலந்தோ, மோரில் கலந்தோ, ஊறவைத்த உளுந்துக் கழுநீரில் கலந்த, மதுவில் கலந்தோ சுரபாலர் (விருட்சர்யுர்வேதம்) முன்மொழிந்தபடி பயிருக்கு விட்டால் மேனி செழிக்கும். ●



# அரச தரப்பு அனைத்துக்கட்சிகளையும் தெரிவுக்குழுவில் இணைக்க முடியாது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசாங்கத் தரப்பில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்க முடியாது என்று அமைச்சரும், அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வாவும் தெரிவித்துள்ளார்.

சபாநாயகரினால் நியமிக்கப்பட்டுள்ள 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவில், 19 பேர் அரசதரப்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடம் பெற்றுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சமசமாசக் கட்சி ஆகியவற்றுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா,

31பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரச தரப்பில் 19 பேர் மட்டுமே இடம் பெற முடியும்.

சபாநாயகர் சமல் ராஜபக்சவின் விருப்பப்படியே அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அரசாங்கத்தில் பெரும் எண்ணிக்கையான கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

அவை எல்லாம் தெரிவுக் குழுவுக்கு நியமிக்கப்படவில்லை. அது நடைமுறைச் சாத்தியமில்லை.

ஆனால் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளுக்கும், தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் செய்யவும், யோசனைகளை சமர்ப்பிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.


தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் வரும் ஜுலை 9ஆம் நாள் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடத்தப்படும்.

அதில் தெரிவுக்குழுவின் நிகழ்ச்சி அட்டவணை தயாரிக்கப்படும்.

ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன, இன்னமும் தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கவில்லை.

அவர்கள் தமது பிரதிநிதிகளை நியமிக்காது போனாலும், குறிப்பிட்ட நாளில் தெரிவுக்குழு செயற்படத் தொடங்கும்.

கண்டிப்பாக ஜுலை 9ஆம் நாளுக்குப் பின்னர், தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



மாடு அறுத்தலை தடை செய்தல் உட்பட ஐந்து கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜரொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. சிங்கள ராவய என்ற அமைப்பினரால் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. மாடு அறுத்தலுக்கு எதிராக சிங்கள ராவய அமைப்பினர் அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பிற்கு பேரணியொன்றை மேற்கொண்டனர். இதன் இறுதியிலேயே ஜனாதிபதியிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

# படை அதிகாரிகள் திருப்பி அழைப்பு இந்திய உறவினைப் பாதிக்காது

## என்கிறார் இராணுவப்பேச்சாளர்



வெலிங்டன் பாதுகாப்புச் சேவைகள் பயிற்சிக் கல்லூரியில இருந்து இரு இலங்கைப் படை அதிகாரிகளையும் விலக்கிக் கொண்டது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளையோ, பயிற்சி ஒத்துழைப்புகளையோ பாதிக்காது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியதால், வெலிங்டனில் பயிற்சி பெற்று வந்த இலங்கைப் படை அதிகாரிகள் இருவரும், விமானம் மூலம் மும்பைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன்பின்னர் அவர்கள் கொழும்பை வந்தடைந்தார்.

இந்த நிலையில் கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய,

கடந்த நான்கு பத்தாண்டுகளாக, இராணுவத்தின் தொழிற்திறன் அபிவிருத்தியில் இந்திய ஆயுதப்படையினர் முக்கிய பங்காற்றி வருகின்றனர்.

இருநாட்டுப் படைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் சில பயிற்சி நிலையங்களில் இலங்கை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் நெருக்கடிகள் உள்ளன.

ஒரு ஆண்டுப் பயிற்சியைத் தொடர முடியாமல், ஒரு மாதத்திலேயே படை அதிகாரிகள் நாடு திரும்பியுள்ளனர்.

வெலிங்டனில் பயிற்சி பெறும் வாய்ப்பை இழந்த அதிகாரிகளுக்கு வேறு இடங்களில் அதற்கான வாயப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைப் படை அதிகாரிகள் மத்தியில், வெலிங்டன் ஒரு பிரபலமான பயிற்சி நிலையம்.

முக்கியமான பொறுப்பிலுள்ள அதிகாரிகள் பலர் அங்கு பயிற்சி பெற்றவர்கள்தான்.

அவர்கள் அங்கு பெற்ற நல்ல அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்புகளை அடுத்து, இந்திய அரசு இருஅதிகாரிகளையும் செகந்திராபாத்தில் உள்ள உயர் பாதுகாப்பு முகாமைத்துவ பயிற்சி நெறிக்கு மாற்ற முன்வந்தது.

அந்தப் பயிற்சிநெறி கேணல் தரத்துக்கு மேற்பட்ட நிலையில் உள்ள அதிகாரிகளுக்குரியது.

அது மேஜர் தரத்திலுள்ள இந்த அதிகாரிகளுக்குப் பயனற்றது என்பதால், அதிகாரிகள் அதனை நிராகரித்து விட்டனர்.

இதனால், அந்த அதிகாரிகள் இருவரையும் அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளது.

இதனால், இந்தியாவுடனான உறவுகளிலோ, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பயிற்சிகளிலோ பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார். புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய முக்கிய புலி உறுப்பினர்கள் 810 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரசியல் கைதிகள் கிடையாது எனவும், கொலை உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான புலிஉறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளித்து, சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்கள் தொடர்பில்ழ ஆதாரங்கள் உடைய புலி உறுப்பினர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிப்பதனை மனித உரிமை மீறலாக கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளத்திட்டம்


மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான சிவில அமைப்புக்களிடம் யோசனை மற்றும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹநாமஹேவா தெரிவித்தார். இது தொடர்பாக சிவில் அமைப்புக்கள் சிலவற்றுடன் அண் மையில் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

அத்துடன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு எதிர்காலத்தில் விதிமுறைகளை தயாரிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சந்திரிக்காவின் ஒப்பந்தங்களை செயற்படுத்தும் அமைச்சர்கள்

## விசனம் கொள்கிறார் விமல் வீரவன்ச



13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்களால் சந்திரிக்காவின் ஒப்பந்தங்களே செயற்படுத்தப்படுகின்றன என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினார். பெலவத்தையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் தொடர்பில் எமது நிலைப்பாடு உறுதியானதே. இந்த நாட்டில் பிரிவினைவாதிகளுக்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை. 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இல்லாதொழிக்கும் வரை எமது போராட்டம் இடம் பெறும். இந்நிலையில் இந்தியாவிற்கு தகாத முறையில் 1987 ஆம் ஆண்டு பிறந்ததே இந்த 13 ஆவது திருத்தமாகும் இதனை இந்தியா எமக்கு பலவந்தமாக திணித்ததனாலேயே எமது நாடு படுகுழியில் தள்ளப்பட்டது.

தற்போது அரசில் உள்ள ராஜித்த மற்றும் ரெஜினோல்ட் குரே போன்றோர் அடங்கிய அமைச்சர்கள் குழு 13 ஆவது திருத்தம் தொடர்பில் சந்திரிக்காவின் ஒப்பந்தங்களையே முன்னெடுக்கின்றனர். இதேவேளை, நாம் இது குறித்து ஜாதிக ஹெல உறுமய மற்றும் முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். 13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் நீக்கப்படும் வரை நாம் தொடர்ந்தும் போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்புச் செயலருடன் தென்னாபிரிக்க குழு பேச்சு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான பிரதியமைச்சர் இப்றாஹிம் இப்றாஹிம் தலைமையிலான உயர் மட்டத் தூதுக் குழுவினர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நல்லெண்ண அடிப்படையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பு உறவுகள் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இதன் போது தென்னாபிரிக்காவின் தூதுக் குழுவுக்கு தலைமை வகித்த அந்நாட்டின் பிரதி அமைச்சர் இப்றாஹிம் இப்றாஹிமுக்கு பாதுகாப்புச் செயலாளர் ஞாபகச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

# கிராமங்களின் அபிவிருத்திக்கு ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம்



கிராம மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதனூடாக கிராமத்தின் அனைத்து வசதிகளையும் உரியவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேலோங்க செய்து ஓர் சிறந்த கிராமத்தினை கட்டியெழுப்ப முடியுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியில் அமையப்பெற்ற தனங்கிளப்பு கிராம அபிவிருத்திச் சங்க பொதுமண்டபக் கட்டடத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மக்களின் தேவைகளினை யாரால் பூர்த்தி செய்ய முடியுமோ அவர்களை அணுகுவதன் ஊடாக கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சரியானதோர் ஆக்கபூர்வமான சிந்தனைகளை உடையவர்களாகத் திகழ்வதனால் உங்களுடைய பாதை சரியானதாகவும் சிறந்த தலைமையினை நோக்கியதாகவும் இருக்கும் என நம்புகின்றேன். பல இன்னல்கள் மத்தியில் மந்தகதியாகி உதயசூரியனாக மாறி வரும் எமது கிராமங்களின் பொது அமைப்புக்கள் மிக வலுவுள்ளதாக அமையவேண்டும். இவ்வாறானதோர் சரியாக வலுவான பொது அமைப்புக்களாக திகழும சந்தர்ப்பங்களில் அனைதது உதவிகளையும் வழங்கத்தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சிப்பிரதேச செயலர் சாந்தசீலன், ஈ.பி.டி.பி தென்ம ராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டத்தின் விசேட செயற்திட்டமாக இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.30மணி வரை மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான கருத்தரங்கும் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான பதிவுகளை மேற்கொள்ளவும், மேலதிக விபரங்களுக்கு 0770540061 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாமென அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

# தனிநடிப்பு,தேசியமட்ட போட்டி யாழ்.மத்தியில் இருவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற நாடகத்திறன் தனிநடிப்புப்போட்டியின் தேசிய மட்டப்போட்டிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் தெரிவாகியுள்ளனர்.

கொழும்பு றோயல் கல்லூரியின் நாடக மன்றத்தினால் வருடாந்தம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வருகின்ற நாடகத் திறன்காண் போட்டிகளில் ஒன்றான தனிநடிப்புப் போட்டியின் மாவட்ட மட்டப்போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போது மேற்பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்களான எஸ்.பிரியலக்ஸ்சன் முதலாமிடத்தையும், த.பிரவீன் இரண்டாமிடத்தையும் பெற்று தேசியமட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

இம்மாணவர்களுக்கான நடிப்புசார் பயிற்சியினையும் வழிப்படுத்தலினையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகமன்றப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன் வழங்கியுள்ளார்.

# யாழ்.கே.கே.எஸ் வீதியில் வீதிக்குறியீடுகள் இடும்பணி

(வலிகாமம்)

யாழ். நகரிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் காப்பற்வீதியின் இருமருங்கிலும் வீதிச் குறியீடுகள் பஸ் தரிப்புக்குரிய அடையாளங்கள் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த பணிகள் குறிப்பாகச் சுன்னாகம்,மருதனார்மடம், இணுவில், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் இடம் பெற்று வருகின்றன.

இப்பணியின் முதற்கட்டமாக பஸ்தரிப்பு இடங்கள் அடையாளமிடப்பட்டு வெள்ளை, கறுப்பு வர்ணங்கள் பூசப்பட்டுள்ள கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன.

வீதியின் இருமருங்கிலும் உள்ள பாடசாலைகள் அரச அலுவலகங்கள் சந்திகள் முதலான இடங்களில் வீதியினைக்கடக்கும் குறியீட்டுக்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன.

அத்துடன் வீதியின் இருமருங்கிலும், நடுவிலும் வெள்ளைக் கோடுகள் இடும் பணியும் இடம்பெற்று வருகிறது. வாகன நெரிசல் காரணமாக ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்கு இந்தப்போக்குவரத்துக் குறியீடு கள் உதவும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (06)

# இராசாவின் தோட்ட வீதி புனரமைப்பு எப்போது?

(குருநகர்)

யாழ். இராசாவின் தோட்ட வ்தி, போக்குவரத்துகசு பாவிக்க முடியாத அளவுக்கு மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, தல்லாலைச் சந்தியில் இருந்து ஸ்ரான்லி வீதிச்சந்தி, றக்கா வீதிச் சந்திகளைத் தாண்டி நாவலர் வீதியைச் சென்றடையும் மேறபடி வீதி பல வருடங்களாகச் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ள நிலையில் சிறுவர் பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ள இவ்வீதியால் உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் இவ்வீதி சேதமடைந்திருப்பது போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக காணப்படுவதாகத் தெரிவிக்கும் பயணிகள் இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (68)

# முரசின் இன்றைய பலன்



28.06.2013.வெள்ளிக்கிழமை.

விஜய வருஷம் ஆனி மாதம் 14 ஆம் திகதி. சதயம்.
முன்னிரவு 08.25 வரை. பஞ்சமித்திதி காலை 6.53வரை
பின் ஷஷ்டி சித்தயோகம்.
இராகுகாலம் 10.25 - 11.55 வரை.
சுபநேரம் 5.55-7.25 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
தொலைந்தது கிடைத்தல், வரவு குறைந்து செலவு அதிகரித்தல், தேகநலம் பாதிப்பு, சகோதரர்களுடன் தாக்கம், லீசிங் வாகனம் பறிமுதல் பற்றிய மனக்கவலை, சத்திர சிகிச்சை, காதுநோயால் மருத்துவரை நாடுதல், கடன் பெற்றதால் கண்ணீர், மனைவியுடன் கருத்து வேற்றுமை, கவலை மறக்க போதை நாட்டம் , திருமண முறிவுக்கு அயலவர் பற்றிய சந்தேகம்.

**ரிஷபம்**
வியாழ சுகத்தினால் இன்பநிலை, போலி நாணயத்தால் அகப்படல், பயிற்சி நெறிகளில் பங்கேற்பு, சுகாதாரத்திற்கு ஒவ்வாத உணவகத்திற்கு சீல் வைத்தல், திருமணப்பேச்சு பச்சைக்கொடி காட்டல், வெளியூரிலிருந்து சுபசெய்தி, குழந்தைப்பேறு, பிதா, சகோதர உதவி, வங்கிக்கடன் பெறுதல், காப்புறுதியினால் பயன் கிடைத்தல்.

**மிதுனம்**
விபச்சார விடுதியில் சிக்கித் தவித்தல், வியாழ சுகக்கேட்டினால் மக்கள் பற்றிய கவலை, சனியினால் சளியின் தொல்லை, சர்ப்பக்கிரகங்களால் மனதிற்கு ஓரளவு நிம்மதி, குழந்தைப்பேற்றுக்கு மருத்துவ ஆலோசனை, வரவு கூடிசெலவு குறைதல். பயணம் பற்றிய இரண்டுங்கெட்டான் நிலை.

**கடகம்**
மதுப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலை, சுபகாரியம் நடாத்த கடன்படல், சத்திரசிகிச்சை பற்றிய பயப்பிராந்தி, மக்கள் மனதிற்கு மகிழ்வூட்டல், நட்டத்தை எதிர்பார்த்தல், நீதிமன்ற முடிவு காலைவாரிவிடல், புள்ளிக்குறைவினால் நேர்காணல் பற்றிய கவலை, புதிய பொறுப்புக்களை சுமக்க கடிதம்.

**சிம்மம்**
தோல்வியினால் பரிதாப மனோநிலை மனக் கட்டுப்பாட்டினால் ஒழுக்கம் பேணல், பதவி உதவி பற்றிய கடிதம், கடன்காரர் தொல்லை நீக்கம், நோய் கட்டுப்பாட்டுக்கு வருதல், பெரியோரின் சந்திப்பு, வேலையாட்களின் ஒத்துழைப்பு, சுவீப்பில் சிறு தொகைப் பணம் வருதல் விஷக்கடி பற்றிய எச்சரிக்கை.

**கன்னி**
களவுபோன வாகனம் மீட்பு, மின்சாரம் தொலைத்தொடர்பு துண்டிப்பு, ஒழுக்காற்று நடவடிக்கை, வாய்த்தர்க்கத்தில் ஈடுபடல், மீற்றர் வட்டிக்கு எடுத்து துயரம், வியாழ கோசரத்தினால் இடமாற்றம் பற்றிய கவலை, இடப்பக்க உறுப்புவிபத்தினால் பாதிப்பு, மின்சாரம் சம்சாரத்தினால் தொல்லை, முடிவை எட்டாது காரியம் இழுபடல், சுவீப் அதிர்ஷ்டம்.

**துலாம்**
வியாழசுகம் இருப்பது நிம்மதி, பயண ஏற்பாடு, ஏழரைச்சனியால் காரியம் இழுபட்டுப்பின் வெற்றி வாகன வேகத்தைக்குறைப்பதால் ஆபத்து விலகல், சகோதரியுடன் முரண்பாடு மாமியார் மருமகள் உறவில் விரிசல், தூசிகளினால் நோய்த்தாக்கம், வங்கித்தொடர்பு முறிவடையும், கடிதம்வரல், வரவு குறைந்து செலவு அதிகரித்தல்.

**விருச்சிகம்**
, சர்ப்பக்கிரகங்களால் விஷக்கெடுதி, எதிர்பார்த்தது மனதிற்கு துயரம். கடன்பட்டு சீவிக்கும் நிலை, சொத்துப்பற்றிய பிரச்சினை, நண்பர் கன்னியர் தொடர்பு ஆறுதல் தரல், கற்பச்சிதைவு.நியாயம் கேட்கச்சென்று கைகலப்பு, இடம்மாறுதல், சகோதரியின் உடற்சுகபாதிப்பு, ஆவணமின்மையினால் காவலர்களால் தண்டம்.


**தனுசு**
சனீஸ்வரதாக்கம் நன்மைப்பலன்,பயணம் பற்றிய இனிப்பான செய்தி, திருமண நிச்சயிப்பு, போட்டிகளில் பரிசில்களும், பாராட்டுக்களும் மேலதிகாரி முதலாளியுடன் சுமுகமான உறவு, பிதா சகோதர உதவி, புதிய பொருட்கள் சேரல், தொலைபேசி மின்சார இணைப்பு.

**மகரம்**
நோய் குணமடைய சத்திர சிகிச்சை, வாய்த்தர்க்கத்தினால் கெடுதி, உத்தியோகம் காலைவாரிவிடல், எதிரி திருடரால் பிரச்சினை, ஆவணம் தவறிப்போதல் கால்நடை விற்கும் நிலை, மனைவியின் தேகநிலை சுகங்காணுதல், அலட்சியப்போக்கினால் நட்டமடைதல்.

**கும்பம்**
பிரயாண முகவர் கைவிரிப்பு, வியாழ சுகத்தினால் நிம்மதி, குழந்தைப்பேறு பிதாவின் நோய்பற்றிய கலக்கமின்மை, சவீப் அதிஷ்டம், எதிர்பாராத நோய் வாய்ப்படுதல், வாகன யோகம், மூத்தசகோதர உதவி, கடன கேட்டு நச்சரித்தல், இடப்பக்க உறுப்பு சிறு விபத்தினால் பாதிப்பு, வியாபார விருத்தி, சுபசெய்தி கேட்டல்.

**மீனம்**
சந்தேகம் சந்தோஷத்தைக் கெடுத்தல், பயணமுயற்சியைக் கைவிடும் யோசனை, மார்புச்சளி நோய் வருத்துதல, சுபகாரியச்செலவு, தனியே செல்வதினால் பயஉணர்வு, கடன்கட்ட கடன்படல், பொறுத்த கட்டத்தில் நண்பர் உதவி, காசோல்ல வங்கியில் பணமின்றி திரும்பும் நிலை.

# விதிமுறை மீறிய செயல்



(லண்டன்)

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளின் நடப்பு சம்பியனான ரோஜர் பெடரர் ஆட்டத்தின் போது அணிந்து கொள்ளும் பாதணியின் அடிப்பாகம் ஒரேஞ் வண்ணத்தில் இருப்பது விம்பிள்டன் ஒழுங்கு விதிகளை மீறுவதாக உள்ளது என்று போட்டி நிர்வாகிகள் கூறியுள்ளனர். இதில் பங்கு பெறும் அனைத்து வீரர்களும் தனி வெள்ளை நிற ஆடை அணிகளுடனேயே போட்டியில் பங்குபெற வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளை ஏழு முறை வென்றுள்ள 31 வயதான ரோஜர் பெடரர் இவ்வகையான காலணியை கடந்த திங்கட்கிழமை தனது முதல் சுற்று ஆட்டத்தின் போது அணிந்திருந்தார்.

பயிற்சிப் போட்டிகள் உட்பட அனைத்து ஆட்டங்களிலும் போட்டியாளர்கள் முழுவதுமாக வெள்ளை ஆடை அணிகளுடனேயே இருக்க வேண்டும் எனும் விதியை அவர் மீறியுள்ளதாக நிர்வாகிகள் கூறுகிறார்கள்.

இது குறித்து போட்டிகளை நடத்தும் அகில இங்கிலாந்து ரென்னிஸ் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் இந்த விடயம் குறித்து முதல் சுற்றை ஆடியுள்ள பல வீரர்களிடம் தாங்கள் பேசியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் மகளிர் முதல் சுற்றுப் போட்டியில் இதே போன்று ஒரேஞ் வண்ண ஓரங்களைக் கொண்ட காலணியை அணிந்து கொண்டு விளையாடிய செரீனா வில்லியம்ஸ் அடுத்த சுற்றின் போது அதை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறப்படவில்லை.

அதே போல முதல் சுற்றுப் போட்டியின் போது அவரது பாதணியில் இருந்த வர்த்தக விளம்பரச் சின்னமும் ஒரேஞ் வண்ணத்தில் இருந்துள்ளது.

இவ்வகையான சம்பவங்களை இனி வரும் போட்டிகளின் போது தவிர்க்கும் நோக்கில் அனைத்து தயாரிப்பாளர்களும் தமது ஆடை அணிகள் வடிவமைப்பை போட்டி தொடங்குவதற்கு சில மணி நேரம் முன்னதாகவே ஆய்வுக்காக சமர்ப்பிக்க வேண்டும் என்று போட்டி விதிமுறைகள் கூறுகின்றன.

எனினும் காலணிகள் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பு இப்படியான கடுமையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுவது குறைவாகவே உள்ளது.

# முன்னணி வீரர்கள் அவுட்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஷரபோவா மற்றும் நடப்புச் சம்பியன் பெடரர் ஆகியோர் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் தற்போது லண்டனில் நடைபெற்று வருகின்றது.

பட்டம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட உலகின் 3ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய ஷரபோவா, 131ஆம் நிலை வீராங்கனை போர்த்துக்கலின் மிசெலி லார்செர் டி பிரிட்டோவை எதிர்கொண்டார். இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய டி பிரிட்டோ 6-3, 6-4 என்ற நேர் செட்டில் 2004ஆம் ஆண்டு சம்பியனான ஷரபோவாவை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தார். இந்த ஆட்டத்தின் போது ஷரபோவா காயத்துக்கு சிகிச்சை பெற்றது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் முதல் நிலை வீராங்கனை சேர்பியாவின் இவானோவிச்சும், 2ஆவது சுற்றில் எளிதில் தோற்றார். இவரை கனடாவின் எக்னி பவுச்சர்ட் 6-3, 6-3 என்ற நேர் செட்டில் துவம்சம் செய்தார். மற்றொரு முன்னாள் முதல் நிலை வீராங்கனை டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கிக்கும் இதே பரிதாபமே நிகழ்ந்தது. செக்குடியரசின் பெட்ரா செட்கோவ்ஸ்காவுக்கு எதிராக 2-6, 2-6 என்ற நேர் செட்டில் வீழ்ந்தார்.



ஆண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், இத்தொடரில் 7 முறை சம்பியன் பட்டம் வென்ற சுவிஸின் ரோஜர் பெடரர், தரவரிசையில் 116ஆவது இடத்தில் உள்ள உக்ரைனின் செர்ஜியை எதிர்கொண்டார்.

இதில் டைபிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை 7-6 என பெடரர் வென்றார். தொடர்ந்து டைபிரேக்கர் வரை நீடித்த இரண்டாவது செட்டை செர்ஜி 7-6 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். மூன்றாவது செட்டை 5-7 என இழந்த பெடரர், டைபிரேக்கர் வரை சென்ற நான்காவது செட்டையும் 6-7 என கோட்டைவிட்டார்.

முடிவில், ரோஜர் பெடரர், 7-6, 6-7, 5-7, 6-7 என போராடி வீழ்ந்தார். இதையடுத்து விம்பிள்டன் தொடரில் கடந்த 2002ஆம் ஆண்டுக்கு பின், இரண்டாவது சுற்றுப் போட்டியில் பெடரர் முதல் முறையாக வெளியேறினார்.

இதேவேளை, முன்னணி வீராங்கனை விக்டோரியா அசரென்கா தனது 2ஆவது சுற்று ஆட்டத்தில் இத்தாலியின் பிளாவியா பென்னட்டாவுடன் மோதவிருந்த நிலையில், காயம் காரணமாக விலகினார்.

விம்பிள்டன் ஆடுகளம் மோசமாக இருப்பதாக அசரன்கா உள்ளிட்ட வீராங்கனைகள் குற்றம்சாட்டினர். பலர் வழுக்கி விழுந்ததைக் காண முடிந்தது. நேற்று முன்தினம் மட்டும் 7 பேர் காயம் காரணமாக வெளியேறினர். கடந்த 45 ஆண்டு கால கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில் இப்படி ஒரே நாளில் வீரர், வீராங்கனைகள் வெளியேறியது இதுவே முதல் முறை.

# சாதிக்க முயற்சிப்போம்



இலங்கை அணியின் தன்னம்பிக்கை உயர்வான நிலையில் உள்ளது. இதன் காரணமாக முக்கோணத் தொடரில் எமது அணி சாதிக்க முயற்சிக்கும் என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இலங்கை அணி சிறப்பான திறமையை வெளிப்படுத்தியது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டிகளை வெற்றி கொண்டு அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்தோம். அதன் காரணமாக வீரர்களின் தன்னம்பிக்கை உச்ச அளவில் உள்ளது.

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் பலமான அணிகள். இரு அணிகளையும் வெற்றிகொள்ள இலங்கை அணியின் உச்சபட்ச திறமையை வெளிப்படுத்த வேண்டியிருக்கும். அதற்காக முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


முக்கோண ஒரு நாள் தொடரின் இன்றைய முதல் போட்டியில் இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி சமரவீர (தனி நபர்) குழுவின் அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 50 மில்லியன் ரூபா நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறப்படுவது தொடர்பிலும், கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏனைய நிதி மோசடிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காகவும் இந்த தனிநபர் குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அதிக எதிர்பார்ப்பு

உள்ளூரில் போட்டிகள் நடைபெறுவதால் முக்கோணத் தொடரில் எங்கள் அணி மீதான எதிர்பார்ப்பு அதிகமாகவுள்ளது. இரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் நாம் ஆட முயற்சிப்போம். எங்களது முதல் இலக்கு எப்படியாவது இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறவேண்டும் என்பதே. நிச்சயம் இறுதிப் போட்டியில் விளையாடக்கூடிய தகுதி எங்களுக்கு அதிகம் இருப்பதாகவே நம்புகின்றேன். ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடரில் சிறப்பாக ஆடிய போதும் அதிர்ஷ்டம் எமக்கு கைகூடவில்லை என மேற்கிந்தியத்தீவு அணியின் அதிரடி வீரர் பொலார்ட் தெரிவித்தார்.

# கொன்படரேசன் கால்பந்து இறுதியில் பிரேசில்



(பெலோஹோரி சோண்ட்)

கொன்படரேசன் கிண்ணக் கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு பிரேசில் அணி தகுதி பெற்றுள்ளது.

கொன்படரேசன் கிண்ணக் கால்பந்துப் போட்டி பிரேசிலில் நடைபெற்று வருகிறது. இந்தப்போட்டியில் மொத்தம் 8 நாடுகள் பங்கேற்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டது.

ஏ பிரிவில் பிரேசில், இத்தாலி, மெக்சிக்கோ, ஜப்பான் அணிகளும் பி பிரிவில் உலக சம்பியன் ஸ்பெயின், நைஜீரியா, உருகுவே, தஹிதி அணிகளும் இடம்பெற்றன.

இதன் முடிவில் ஏ பிரிவில் இருந்து பிரேசில், இத்தாலி அணிகளும் பி பிரிவில் இருந்து ஸ்பெயின் -உருகுவே அணிகளும் அரை இறுதிக்கு தகுதி பெற்றன. மெக்சிக்கோ, ஜப்பான், நைஜீரியா, தஹிதி அணிகள் வெளியேற்றப்பட்டன.

2 நாள் ஓய்வுக்கு பின்னர் அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. பிரேசில்- உருகுவே அணிகள் மோதிய முதலாவது அரையிறுதி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரேசில் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் பிரெட் முதல் கோலை அடித்தார். முதல் பாதியில் பிரேசில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. 2ஆவது பகுதி ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் உருகுவே பதில் கோல் அடித்து சமன் செய்தது. எடின்சன் கவானி இந்தக் கோலை அடித்தார்.


ஆட்டம் நிறைவடைய 4 நிமிடங்கள் இருந்தபோது பிரேசில் அணி 2ஆவது கோலை அடித்து வெற்றி பெற்றது. பவுலினோ இந்தக் கோலை அடித்தார்.

## இளவாலை திருக்குடும்பம், நெல்லியடி ம.ம.வி.


# மாகாண எறிபந்தில் சம்பியன்





மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி



வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்



கனகராயன்குளம் மகாவித்தியாலயம்

(வவுனியா)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்துப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் இளவாலை திருக்குடும்பம் கன்னியர் மடம் மகாவித்தியாலய அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்துப் போட்டி கடந்த 24,25ஆம் திகதிகளில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டதுடன் மாகாண மட்டப் போட்டியும் நடத்தப்பட்டது. இதில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே அசத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் இளவாலை திருக்குடும்பம் கன்னியர் மடம் மகாவித்தியாலய அணியும், வவுனியா சுதந்திரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதின. இதில் முதற் செட்டை சுதந்திரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 25-16 என்ற செட் கணக்கில் கைப்பற்றி முன்னிலை பெற்றது. இதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட இளவாலை திருக்குடும்பம் கன்னியர் மடம் மகாவித்தியாலய அணி சிறப்புடன் ஆடி இரு செட்களையும் கைப்பற்றிக் கொண்டது. இறுதியில் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலய அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள்,பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், ஆதரவாளர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள், இரசிகர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

(93,17)

# வென்றது ஸ்கந்தவரோதயா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோயதாக் கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று கடந்த புதன்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 31.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யதுசன் 20, பிரவீன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத் மூன்று, மதுசன், சரத்குமார் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 158 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 23.3 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மிதுசாந் இரண்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 55, சயந்தன் ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். பந்து வீச்சில் சிலோசன், ஜனுசன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(17)

# மாகாண மட்ட விளையாட்டு யாழ்ப்பாண வலயம் முன்னிலை

(யாழ்ப்பாணம்)

நடப்பாண்டுக்கான வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் கடந்த 25ஆம் திகதி நிறைவடைந்த எறிபந்து போட்டி முடிவுகளின் படி யாழ்ப்பாண வலயம் தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த இத்தரப்படுத்தலில் விபரம் வருமாறு:

| நிலை | வலயம் | புள்ளிகள் |
|---|---|---|
| 01) | யாழ்ப்பாணம் | 436 |
| 02) | வலிகாமம் | 357 |
| 03) | வடமராட்சி | 295 |
| 04) | கிளிநொச்சி | 144 |
| 05) | முல்லைத்தீவு | 099 |
| 06) | மன்னார் | 090 |
| 07) | வவுனியா வடக்கு | 083 |
| 08) | வவுனியா தெற்கு | 074 |
| 09) | தென்மராட்சி | 063 |
| 10) | தீவகம் | 027 |
| 11) | துணுக்காய் | 014 |
| 12) | மடு | 005 |


# வடமாகாண மட்ட பட்மின்ரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பட்மின்ரன் போட்டி நேற்று முதல் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நாளை வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 15,19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தணியாத தீவிரவாதம்

வானவில் இதழ் தலையங்கத்திலிருந்து.




வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக சில தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை பங்கிட்டு அளிப்பதற்கு எதிராக கூக்குரலிட தொடங்கியுள்ளனர்.

26 வருடங்களுக்கு முன்னர் (1987 இல்), இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டு, இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 8 மாகாணசபைகளுக்கு (வடக்கு - கிழக்கு மாகாணம் அப்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டு ஒரு சபை யாக இருந்தது) அதிகாரத்தை பங்கிட்டு அளித்த 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை இரத்து செய்யக்கோரி தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் இரு அரசியல் கட்சிகளும் பௌத்த அமைப்பொன்றும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

முதன்முறையாக 1988ஆம் ஆண்டில், மூன்று கட்டங்களாக 8 மாகாணசபைகளுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. 1990ஆம் ஆண்டிற்கு பின்னர் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண-சபை செயலிழந்தது. எனினும் ஏனைய 7 மாகாணசபைகளும் தொடர்ந்து இயங்கின. அதாவது 25 வருடங்களாக 13ஆவது திருத்தச்சட்டம் 7 மாகாணசபைகளில் எதுவித எதிர்ப்புமின்றி அமுலில் இருந்து வருகின்றது. 1988ஆம் ஆண்டிற்குப் பின்னர் 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு, 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணசபையும் தற்போது செயற்பட தொடங்கியுள்ளது.

25 வருடங்களின் பின்னர் இவ்வருடம் வடக்கு மாகாணத்திற்கான தேர்தல் நடாத்தப்படுமென அறிவிப்புகள் வெளியான நிலையில், தென்னிலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக் கோரிய தீவிர பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. வடக்கு மாகாணசபைத் தேர்தலில் பிரிவினைவாத எண்ணக்கருவினை கொண்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு வெற்றி பெறுமானால், 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை தமது பிரிவினைவாத நோக்கங்களுக்கு ஏதுவாக பயன்படுத்துவார்கள் என சில தென்னிலங்கை அரசியல் வாதிகள் கருதுகிறார்கள்.

13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக்கோரும் பிரசாரத்தின் தீவிரத்தன்மையினை அவதானிக்கும்போது, 1983ஆம் ஆண்டுகாலத்திற்கு முற்பட்ட காலப்பகுதிக்கு தென்னிலங்கையின் அரசியல்களம் நகர்த்தப்படுகின்றதா? என்ற அச்சம் தோன்றியுள்ளது. 25 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தின் அறுவடை, 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்குவதிலிருந்தா ஆரம்பிக்கவுள்ளது? மாகாணசபை முறையை தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வாக ஏற்றுக்கொள்ளாதவர்கள், வேறு எந்த வகையில் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தப் போகிறார்கள்?

தமிழ் தேசியக்கூட்டமைப்பு உட்பட புலிகள் சார்பு உள்நாட்டு, வெளிநாட்டு தமிழ் அரசியல்வாதிகள், 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தமிழ் மக்களுக்கான குறைந்தபட்ச தீர்வாக ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முக்கிய பகுதிகளை நீக்கக்கோரிய பிரசாரங்கள் தென்னிலங்கையில் வலுவாகியுள்ள நிலை யில், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இச்சட்டத்தினை காப்பாற்ற, இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியாவை தலையிடுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். மாகாணசபை முறை ஒற்றை ஆட்சிக்கு உட்பட்டதென அதனை நிராகரிப்பவர்கள், மாகாணசபை முறையை காப்பாற்ற இந்தியாவை வருந்தி அழைப்பதை "இதெல்லாம் அரசியலில் சர்வ சாதாரணமப்பா" என்ற வார்த்தைகளால்தான் உள்ளடக்கலாம்.

2009 ஆண்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட புலி களுடனான யுத்தத்தில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டுமென்ற பலமுனை களிலான அழுத்தம், தமிழ் நாட்டில் இலங்கை அரசுக்கும் சிங்கள இனத்தவருக்கும் எதிராக அதிகரித்துவரும் தீவிரவாதம் போன்றவற்றில் சிக்கி மீளமுடியாமல் தவிக்கும் இலங்கை, உள்நாட்டில் மேலும் புதிய சிக்கல்களை தோற்றுவிக்காமல் இருப்பது நல்லது.

---

சுவிட்சர்லாந்திலுள்ள பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனம் "நோவர்டிஸ் ஏ.ஜி". இந்நிறுவனம் இரத்தப் புற்றுநோய்க்காக Gleevec என்ற மருந்தைத் தயாரித்து வருகிறது. இம்மருந்தை இந்தியாவில் விற்பனை செய்வதற்காக தனது தயாரிப்புக்கு காப்புரிமை வழங்க




## வரலாற்று முக்கியமான தீர்ப்பு!

வேண்டும் என்று 2005ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள காப்புரிமை கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு கோரிக்கை விடுத்தது. அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மருந்து நிறுவனம் 2009 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்தது. தங்கள் நிறுவனம் தயாரிக்கும் Gleevec மருந்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனப் பொருள் சேர்க்கப்பட்டிருப்பதாக வாதிட்டது. "இரத்தப் புற்றுநோய்க்கென தயாரிக்கப்படும் "கிளீவெக்" மருந்தில் பயன் படுத்தப்படும் "இமேடினிப் மெசிலேட்" என்ற இரசாயனப் பொருள் புதிய கண்டுபிடிப்பு அல்ல, ஏற்கெனவே மருத்துவத்துறையில் அறிமுகமான இரசாயனப் பொருள்தான்" என்று குறிப்பிட்டு காப்புரிமை வழங்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

வேடிக்கை என்னவென்றால், இரத்தப் புற்றுநோய்க்கென ஒரு மாதத்திற்கு தேவையான மருந்தின் விலை ஒரு லட்சத்து 20 ஆயிரம் இந்திய ரூபா என நோவர்டிஸ் நிறுவனம் நிர்ணயித்துள்ளது. இந்தியாவிலுள்ள மருந்து தயாரிப்பு கம்பெனிகளும் இரத்தப் புற்றுநோய்க்கு பொதுப்படையான மருந்தைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. ஒரு மாதத்திற்கான அந்த மருந்தின் விலை ரூபா 8 ஆயிரம் மட்டுமே. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை இந்தியாவிலுள்ள மருந்து கம்பெனிகள் வரவேற்றுள்ளன. ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு, இனிமேல் இந்தியாவிலேயே புற்றுநோய்க்கு மலிவான விலையில் மருந்துகளைத் தயாரிக்க தடையில்லை என்று இந்திய மருந்து தயாரிப்பு கம்பெனிகள் குறிப்பிட்டுள்ளன.

---

## தாகூரின் கீதாஞ்சலி



உலகப் புகழ்பெற்ற ஞானக் கருவூலமாகிய "கீதாஞ்சலி" என்ற நூலை ரவீந்திரநாத் தாகூர் தன் 51 ஆவது வயதில் எழுதினார். இந்த நூலுக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1912 இல் தாகூரின் அன்பு மனைவியும் பிள்ளைகளும் ஒருவர் பின் ஒருவராக மரணம் அடைந்தனர். தனித்துவிடப்பட்டார் தாகூர். அப்போது தனிமை சோகத்தைப் போக்க நீர்த்தடாகங்களில் படகில் அமர்ந்தபடி தாகூரால் எழுதப்பட்டதுதான் கீதாஞ்சலி. இதில் 103 பாசுரங்கள் உள்ளன.

---

## தபால் பெட்டியின் கதை!

1500ஆம் ஆண்டில் பதிய நாடுகளைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டார் போர்த்துக்கீசிய மாலுமி பார்த்தலோமியே டயஸ். அவருடன் மேலும் சில மாலுமிகளும் கடற்பயணம் செய்தனர். அவர்கள் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்காவில் புயலில் சிக்கியது. அப்போது மாலுமி டயஸ் மரணமடைந்தார். அவர் பயணம் செய்த கப்பல் தென்னாபிரிக்க கடற்கரைத் தீவு ஒன்றில் ஒதுங்கியது. உயிர் பிழைத்த மாலுமி ஒருவர், தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒரு கடிதத்தில் எழுதி, அதைத் தன்னுடைய காலணிக்குள் போட்டு ஒரு மரத்தில் தொங்கவிட்டுச் சென்றார்.

பத்து மாதங்களுக்குப் பிறகு அந்தத் தீவுக்கு வந்த மற்றொரு போர்த்துக்கீசிய மாலுமியான ஜோஒடாநோவா என்பவர் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்தக் காலணியைத் தற்செயலாகப் பார்த்தார். உள்ளே இருந்த கடிதத்தைக் கண்டு விவரம் தெரிந்து கொண்டார்.


அதிலிருந்து அந்தத் தீவுக்கு வருபவர்கள் அந்தக் காலணியையே கடிதங்கள் போடும் பெட்டியாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதுவே உலகின் முதல் தபால் பெட்டி.



தென் ஆபிரிக்காவிலுள்ள மோசல் என்னுமிடத்தில் இன்றும் அந்த மரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த மரத்தில் காலணி வடிவ தபால் பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

தபால் பெட்டிக்கு சிவப்பு நிறம் பூசும் வழக்கம் உலகில் முதன்முறையாக 1874ஆம் ஆண்டு இங்கிலாந்தில் லண்டனில் தொடங்கியது.

# நம்மை அழைக்கும் புதன், வியாழன், வெள்ளி




May 26, 2013

சூரிய மண்டலத்திலேயே மிகப் பெரிய கிரகமான வியாழன், மிகச் சிறிய கிரகமான புதன், பூமி அளவில் உள்ள வெள்ளி (சுக்கிரன்) ஆகிய மூன்று கிரகங்களையும் மேற்கு வானில் அருகருகே காண்கின்ற வாய்ப்பு இப்போது கிட்டியுள்ளது.

மே 26 ஆம் திகதியன்று மேற்குத் திசையில் அடிவானத்துக்கு சற்று மேலே வியாழன், வெள்ளி, புதன் ஆகிய மூன்றும் இவ்விதமாகக் காட்சி தந்தது. அடிவானத்துக்கு சற்று மேலே முக்கோணத்தின் மூன்று புள்ளிகள் போல இவை தெரிந்தன.

இந்த மூன்றில் மிகப் பிரகாசமானது தான் வெள்ளி (Venus). அதன் அருகே பிரகாசம் குறைந்ததாகத் தெரிவது வியாழன் (Jupiter). இந்த இரண்டு கிரகங்களையும் எளிதில் வெறும் கண்ணால் பார்க்க முடியும். இந்த இரண்டுக்கும் அருகே மிக மங்கலான புள்ளியாகத் தெரிவது புதன் கிரகம். (Mercury). புதன் கிரகம் கண்ணில் தென்படுவது அபூர்வம். மிக மங்கலாக இருப்பதே அதற்குக் காரணம். எனினும் கூர்ந்து கவனித்தால் தெரியும். தொலைநோக்கி மூலம் பார்த்தால் புதனை நன்கு காண முடியும். ஆனால் வெள்ளியையும் வியாழனையும் பார்க்க தொலைநோக்கி தேவையில்லை.

மேற்கு வானில் மூன்று கிரகங்களும் அருகருகே தென்பட்டாலும் இந்த மூன்றும் வெவ்வேறு தொலைவில் இருப்பவை. இந்த மூன்று கிரகங்களில்

- என்.ராமதுரை -



வியாழன் பூமியிலிருந்து சுமார் 90 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. வெள்ளி சுமார் 25 கோடி கி.மீ. தொலைவிலும் புதன் சுமார் 18 கி.மீ. தொலைவிலும் உள்ளன.

நீங்கள் உங்கள் வீட்டு ஜன்னல் வழியே பார்வையைச் செலுத்துகிறீர்கள். அப்போது உங்கள் வீட்டைக் கடந்து ஒரு சைக்கிள் மெதுவாகச் செல்கிறது. அதற்கு அப்பால் தெரிகிற வீதியில் ஒரு மாட்டு வண்டி செல்கிறது. அதைத் தாண்டி தொலைவில் ஒரு பஸ் மெதுவாகச் செல்கிறது. நீங்கள் பார்க்கின்ற நேரத்தில் இந்த மூன்றும் வெவ்வேறு தொலைவில் தெரிகின்றன. புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்றும் வானில் நமக்கு இப்படியாகத் தான் தெரிகின்றன.

ஜன்னல் வழியே பார்க்கும் போது சைக்கிள், மாட்டு வண்டி, பஸ் ஆகியவை வெவ்வேறு தொலைவில் உள்ளதை நம்மால் அறிய முடிகிறது. ஆனால் வானத்தில் மூன்று ஒளிப்புள்ளிகளாகத் தெரிகிற மூன்று கிரகங்களில் எது எந்த தூரத்தில் உள்ளது என்பது நமக்குப் புலப்படுவதில்லை.

சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்கள் எல்லாமே சூரியனைச் சுற்றி வருகின்றன. தத்தம் சுற்றுப்பாதையில் வெவ்வேறு வேகத்தில் சுற்றும் கிரகங்கள் அபூர்வமாக ஒன்றன் பின் ஒன்றாக அமையும் போது வானில் அவை ஒரே பகுதியில் ஒன்று கூடி நிற்பது போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

மேலே உள்ள புகைப்படம் புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று கிரகங்களையும் காட்டுகிறது. போலந்து நாட்டைச் சேர்ந்த Marek Nikodem என்பவர் மே 26 ஆம் திகதி மாலையில் இந்தப் படத்தை எடுத்தார். படத்தில் கீழ்ப்புறத்தில் இருப்பது வெள்ளி (Venus) இடது புறம் இருப்பது வியாழன் (Jupiter). மேற்புறத்தில் இருப்பது புதன் (Mercury).



## எம்ஜியாரின் ஜோடி!

லட்சுமி காந்தன் கொலை வழக்கில் என்.எஸ்.கிருஷ்ணன் சிறையில் இருந்தபோது என்.எஸ்.கே. நாடகக் குழுவுக்கு வருமானம் வேண்டுமே என்பதற்காக தன் மனைவி நடிகை டி.ஏ.மதுரத்தை திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கக் கேட்டுக்கொண்டார் என்.எஸ்.கே. அதன்படி அவரது "பைத்தியக்காரன்" என்ற நாடகம் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டது.

அந்தப் படத்தில் ஒரு விசேஷ அம்சம் என்ன தெரியுமா? எம்.ஜி.ஆரின் காதல் ஜோடியாக நடித்தவர் டி.ஏ.மதுரமேதான். பல படங்களில் டி.ஏ.மதுரம் நடித்திருந்தாலும் எல்லாப் படங்களிலுமே என்.எஸ்.கே.வுக்கு மட்டுமே ஜோடியாக நடித்திருக்கிறார் டி.ஏ.மதுரம். என்.எஸ்.கிருஷ்ணனைத் தவிர வேறு ஒரு நடிகருக்கு ஜோடியாக நடித்தது எம்.ஜி.ஆருடன் மட்டும்தான்!

('எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம்' நூலில் கே.பி.ராமகிருஷ்ணன்)

# பஞ்சு, சிலந்தி, மேகம்!

(ஜப்பான் நாட்டு சிறுவர் கதை)

முன்னொரு காலத்தில் ஜப்பானின் ஒரு பகுதியில் "யோஸாகோ" எனும் பெயருடைய இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு விவசாயி.

ஒருநாள், அவன் தனது வயலில் வேலை செய்துகொண்டிருந்தான். அப்போது பாம்பு ஒன்று ஒரு சிலந்தியைப் பிடித்து உண்ண முயற்சித்துக் கொண்டிருந்தது. யோஸாகோவுக்கு சிலந்தி மீது இரக்கம் ஏற்பட்டது. உடனே அவன் தனது த்டியை எடுத்துக்கொண்டு ஓடிச் சென்று அந்தப் பாம்பை விரட்டியடித்தான். உயிர் தப்பிய சிலந்தி விவசாயிக்கு நன்றிக்கடன் ப்ட்டதாய், தனது தலையைச் சாய்த்து அவனுக்கு நன்றி செலுத்திவிட்டு, சென்று மறைந்தது.

இது நடந்து சில நாட்கள் ஆகியிருக்கும். ஒரு நாள் யோஸாகோவின் வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அத்துடன் யாரோ மெல்லிய குரலில் "ஐயா" என்று அழைப்பதும்கேட்டது. கதவைத் திறந்து பார்த்தவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அங்கே ஓர் அழகிய பெண் நின்று கொண்டிருந்தாள்.

அவள், "உங்களுக்கு ஆடை நெய்ய ஆள் தேவைன்னு கேள்விப்பட்டேன். தயவு செய்து நான் உங்கள் வீட்டில் இருக்க அனுமதி கொடுங்கள். நான் உங்களுக்குத் துணி நெய்து கொடுப்பேன்" என்றாள்.

யோஸாகோவுக்கு அவனுடைய தறியில் ஆடை நெய்ய உண்மையிலேயே ஆள் தேவை இருந்தது. அதனால் அவன் மிகுந்த சந்தோஷத்துடன் அந்தப் பெண்ணைத் தனது வீட்டில் தங்கிக்கொள்ள அனுமதித்தான்.

தறி இருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்று காட்டினான். அவளும் உடனே ஆடை நெய்ய ஆரம்பித்தாள்.

அன்று இரவு தறி இருந்த அறைக்கு யோஸாகோ சென்றான். எவ்வளவு துணி நெய்திருக்கிறாள் பார்க்கலாம் என்று யோசித்தபடி சென்றவனுக்கு வியப்பு காத்திருந்தது.

அவன் வைத்திருந்த நூல்கள் எல்லாவற்றையும் நெய்து முடித்திருந்தாள் அந்தப் பெண்.

ஒரே நாளில் இவ்வளவு துணியை நெய்து முடிக்க யாராலும் முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

அதனால் அந்தப் பெண்ணை விசாரித்தான்.

அந்தப் பெண் அவன் கேட்ட கேள்விக்கு அளித்த பதில் விந்தையாக இருந்தது.

"நீங்கள் என்னிடம் இந்த மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கக்கூடாது. இனிமேல் இந்தத் தறி அறைக்குள் என் அனுமதியில்லாமல் நீங்கள் வரக்கூடாது" என்றும் கூறினாள்.

இதைக் கேட்டு, சரியென்று தலையாட்டினான் யோஸாகோ. இருந்தாலும் அவள் ஏன் அப்படிச் சொல்கிறாள் என்ற எண்ணம் அவனுக்குள் சுழன்று கொண்டேயிருந்தது.

ஒருநாள், அவளுக்குத் தெரியாமல் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தான்.


அங்கே அவன் பார்த்த காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

அங்கே அந்தப் பெண்ணுக்குப் பதிலாக ஒரு பெரிய சிலந்தி துணி நெய்து கொண்டிருந்தது. அது பஞ்சை விழுங்கி நூலாக்கித் தனது வாயிலிருந்து வெளிக்கொண்டு வந்து, தறியில் நுழைத்து துணி நெய்து கொண்டிருந்தது. மளமளவென்று துணிகள் தயாராகிக் கொண்டிருந்தன.

அவன் அந்தச் சிலந்தியை நன்றாக உற்றுப் பார்த்தான். அப்போதுதான் தெரிந்தது - அந்தச் சிலந்தி இவனால் பாம்பிடமிருந்து காப்பாற்றப்பட்ட சிலந்தி என்பது.

அவன் செய்த உதவிக்கு, அது தனது நன்றிக்கடனை இப்படிச் செய்து கொண்டிருந்தது போல. அதனால்தான் அது பெண் வேடம் எடுத்துத் தனது வீட்டுக்கு வந்திருக்கிறது என்பதும் அவனுக்குப் புரிந்தது.

யோஸாகோ மிகவும் ஆச்சரியமடைந்தாலும் அது தனக்குச் செய்யும் கைம்மாறை எண்ணி மகிழ்வடைந்தான். அறையில் பஞ்சும் நூலும் காலியாகியிருந்ததைக் கவனித்தான்.



மறுநாள், அதிகாலையிலேயே யோஸாகோ நகருக்குச் சென்றான். பெருமளவில் பஞ்சை வாங்கிய அவன், அதன் மூலம் நிறையத் துணி கிடைக்கும், அதன் மூலம் தனது வருமானமும் அதிகரிக்கும் என்று எண்ணிக்கொண்டே பஞ்சு மூட்டையைச் சுமந்து கொண்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஓரிடத்தில் ஓய்வு எடுக்க எண்ணி, மூட்டைய இறக்கி வைத்துவிட்டு, சற்றே அமர்ந்தான். அப்படியே தூங்கிப் போனான். அப்போது, சிலந்தியைக் காப்பாற் றியபோது அவனால் விரட்டியடிக்கப்பட்ட பாம்பு அங்கே வந்தது. அது அந்தப் பஞ்சு மூட்டைக்குள் புகுந்து ஒளிந்து கொண்டது.

விழித்தெழுந்த யோஸாகோ, இதைப் பற்றி ஒன்றும் தெரியாதவனாக, தனது மூட்டையைத் தூக்கிக் கொண்டு, வீடு நோக்கி நடந்தான்.

அளவுக்கதிகமாக பஞ்சு வந்ததைப் பார்த்த அந்தப் பெண் மகிழ்ந்து போனாள். உடனே தனது அறைக்குள் சென்று துணி நெய்யத் தொடங்கிவிட்டாள்.

அறைக்குள் சென்றதும் சிலந்தியாக மாறினாள். பஞ்சை எடுத்து மளமளவென்று விழுங்கியது. பிறகு நூலாக்கி, துணி நெய்ய ஆரம்பித்தது அந்தச் சிலந்தி.

அப்போது திடீரென மூட்டைக்குள்ளிருந்த பாம்பு வெளியே வந்து அந்தச் சிலந்தியைப் பிடித்து விழுங்குவதற்காகத் தனது வாயைத் திறந்தது.

இதைக் கவனித்து, திடுக்கிட்ட சிலந்தி, செய்வதறி யாமல், ஜன்னல் வழியே வெளியில் குதித்து ஓடியது.

பாம்பு அதனைத் துரத்திக்கொண்டே சென்றது. வயிற்றுக்குள் நிறையப் பஞ்சு இருந்ததால் சிலந்தி யால் வேகமாக ஓட முடியவில்லை. பாம்பின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

வெகு சீக்கிரமே சிலந்தியை நெருங்கிய பாம்பு, தனது வாயைத் திறந்து அதை விழுங்கப் போகும்போது, மேலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சூரியனுக்கு அந்தச் சிலந்தி மீது இரக்கம் பிறந்தது. (யோஸாகோ சிலந்தியைக் காப்பாற்றியதும், சிலந்தி துணி நெய்து கைம்மாறு செய்து கொண்டிருப்பதும் சூரியனுக்குத் தெரியும்).

உடனே சூரியன் தனது ஒளிக்கற்றை ஒன்றை அனுப்பி, கண்ணிமைக்கும் நேரத்தில் சிலந்தியைத் தூக்கி, விண்ணுக்குக் கொண்டு சென்றது. பாம்பால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று.

தனக்கு உதவி செய்த சூரியனுக்கு மிகவும் நன்றிக் கடன் பட்ட சிலந்தி ஏதாவது கைம்மாறு செய்ய வேண்டும் என்று நினைத்தது.

தான் உட்கொண்ட பஞ்சினைக் கொண்டு விண்வெளியில் அழகிய மெத்தை போல பறக்கவிட்டு அழகு பார்த்தது. வானமெங்கும் சிலந்தியின் வாயிலிருந்து வெளிவந்த பஞ்சு, மேகங்களாக உலாவி, வானமே அழகாக மாறியது.

இந்த மேகங்களைப் பார்த்த மக்கள், அவை பஞ்சு போல மென்மையாகவும் அழகாகவும் இருக்கின்றன என்று கூற ஆரம்பித்தார்கள்.

இதனால்தான் ஜப்பானிய மக்கள் சிலந்தியையும் மேகத்தையும் "கோ-மு" என்று ஒரே பெயரிட்டு அழைக்கின்றனர்.

# கட்டாயமான பாடசாலைக் கல்வி முறை க.பொ.த சாதாரண தரம் வரை நீடிப்பு

## அமைச்சர் பந்துல தகவல்

தரம் 8 வரை கட்டாயமாக்கப்பட்டிருந்த பாடசாலைக் கல்வி, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியின் மூலம் உயரிய பலன்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் எனவும், அவர் தெரிவித்துள்ளார். பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதை எட்டிய, ஆனால் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கையை வெளியிடும் வைபவத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் உதவியுடனும், யுனிசெப், யுனெஸ்கோ நிறுவனங்களின் பங்களிப்புடன் இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

நூற்றில் ஒரு வீதமான குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதில்லையென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலையை விட்டு இடை விலகிய மாணவர்கள் 0.8 வீதமானவர் ஆவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல மேலும் தெரிவிக்கையில்,

புலிகளின் செயற்பாடு காரணமாக கடந்த 30 வருடங்களாக மாணவர்களின் கல்வி உரிமை அழிக்கப்பட்டதாகவும், வடக்கு - கிழக்கு மக்கள் மட்டும் புலிகளின் செயற்பாடுகளால் பாதிப்படையவில்லை எனவும், பெரும்பாலான மாணவர்களின் உரிமைகள் புலிகளால் பறிக்கப்பட்டன எனவும், மாணவர்கள் சிறுவர் போராளிகளாகவும் இணைத்துக் கொள்ளப்பட்டதால் ஆரம்ப வகுப்பில் மாணவர்கள் சேர்ப்பது குறைவடைந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்ற கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் கோட்டாபய ஜயரட்ன, யுனிசெப் நிறுவனத்தின் கல்விப் பிரிவிற்கான தலைவர் சாரா பொல்மன் ஆகியோர் பங்குபற்றினர்.

# சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் இலங்கையில் அமுலாக வேண்டும்

## வலியுறுத்துகிறது மன்னிப்புச்சபை

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ளதாகவும், இன்னமும் சாட்சியங்களை உரிய முறையில் பரிசீலிக்க அதிகாரிகள் தவறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

அதிகாரிகள், பிரஜைகள் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்பு கொள்வதனை தடுத்து வருகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத கைதுகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பில் அரசாங்கம் மெய்யான தகவல்களை வெளியிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டிற்கு முன்னதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்துச் செய்ய வேண்டுமென தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத அனைத்து சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்படும் அனைவருக்கும் சட்டத்தரணிகளின் சேவையை பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

# யாழ். பல்கலை மாணவர்கள் மோதல் விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம்

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பிரிவில் கல்வி கற்றுவருகின்ற தென்னிலங்கை மாணவர்களுக்கிடையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முடிவுகளை துணைவேந்தரிடம் கையளித்துள்ளதாக யாழ். பல்கலைககழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவரும் மாணவர்களின் சிரேஷ்ட ஆலோசகருமான ப.புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கலவி கற்றுவருகின்ற முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த 3 ஆம் வருட மாணவர்களுக்கும் முதலாம வருட மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கோஷடி மோதல் தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பிரிவில் கல்வி கற்று வருகின்ற தென்பகுதியைச் சேர்ந்த 3 ஆம் வருட மாணவர்களுக்கும் முதலாம் வருட மாணவர்களுக்குமிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளத்தில் அமைநதுள்ள விகாரை முன்றலில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முதலாம் வருட மாணவர்கள் 3 ஆம் வருட மாணவர்களுக்கு கீழ் படிவதில்லை என்ற முரண்பாட்டினால் இரு குழுக்களுக்கிடையே மோதல் சம்பவங்கள் ஏறபட்டுள்ளன. இதற்கமைய விசாரணைகளை மேற்கொண்டிருந்தோம்.

அத்துடன் இக் கோஷ்டி மோதல்கள் இடம்பெறும் போது அருகிலிருந்த மாணவர்களிடமும் நாம் இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 6 மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# உதவி அரச அதிபர் மீது தாக்குதல் கண்டித்துப் பணியாளர்கள் ஊர்வலம்



(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் அரச அதிகாரி ஒருவர் பொதுமக்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அரசாங்க பணியாளர்கள் நேற்றுமுன்தினம் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் மாலிக் என்பவரும் அவரது வாகன ஓட்டுநரும் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே தாம் இந்த அமைதி ஊர்வலத்தை ஏற்பாடு செய்ததாக கற்பிட்டி பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளரான முஹமட் ஜனாப் கூறினார்.

இதற்கிடையே இந்தச் சம்பவம் தொடர்பில் தான் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருப்பதாக தாக்குதலுக்குள்ளான அதிகாரி மாலிக் தெரிவித்தார்.

தனது உடல்நிலை தேறி வருவதாகவும், தனது ஓட்டுநரின் நிலைமையே மோசமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

எவரும் தன்னைத் தாக்கியதற்கான காரணம் எதனையும் கூறவில்லை என்று கூறிய மாலிக் அவர்களிடம், யானைகள் பிரச்சினை தொடர்பில் மக்கள் ஆத்திரமடைந்திருக்க வாய்ப்பிருக்கிறது அல்லவா என்று கேட்டபோது, அதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் ஒரு பிரதேச செயலர் என்ற வகையில் தன்னால் அந்த விடயத்தில் செய்யக் கூடியவை மிகவும் குறைவே என்றும் அரசாங்க உயர்மட்டத்தில் ஒரு முடிவு எடுத்து செய்யப்பட வேண்டிய விடயங்களே அதிகம் இருப்பதாகவும் கூறினார்.

யானைகள் - மனிதன் முரண்பாடு என்பது இலங்கையில் அதிகரித்து வருகின்ற ஒரு பிரச்சினையாக இருப்பதாகவும் அவர கூறினார்.

# கைதிகளின் குடும்பங்களுக்கு நலன்புரித்திட்டம் நடைமுறை

## சமூகசேவைகள் அமைச்சு நடவடிக்கை

சிறைவாசம் அனுபவிக்கும் குடும்பங்களுக்கு நலன் புரி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த சமூகசேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நீதிமன்றத்தின் ஊடாக குற்றம் விதிக்கப்பட்ட சிறைவாசம் அனுபவிக்கின்ற நபர்களின் குடும்பங்களின் நலன்புரிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்க்கொள்ளும்படி சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் ஊடாக விடப்பட்ட வேண்டுதலின் அடிப்படையில் சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தலை சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பி சமூக சேவை அலுவலர்கள் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

குடும்பத் தலைவர் சிறைவாசப்பட்டு தண்டனை அனுபவிக்கின்ற குடும்பங்களின் ஏனைய அங்கத்தவர்கள் சமூக பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதன் காரணமாக தவறான பாதையில் ஏனையவர்களும் செல்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு இத்தகைய சிறைவாசம் அனுபவிப்பவர்களின் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் பிழையான பாதையில் செல்வதைத் தடுக்கும் வகையிலும் அவர்களை தேசிய அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றும் வகையிலும் இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

சிறைவாசம் அனுபவிப்பவர்களின் வறுமையை போக்கவும் குடும்ப வருமானத்தை உயர்த்தும் வகையிலும் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென சமூக சேவைகள் அமைச்சு நிதி உதவி உட்பட தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கவும் முன்வந்துள்ளது.

# சட்டவிரோத இலங்கையரை திருப்பி அனுப்புகிறது சுவீடன்

சட்டவிரோதமான முறையில் சுவீடனில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இலங்கையின் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுவீடன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் சுவீடனில் தங்கியிருக்கும் அகதிக் கோரிக்கையாளர்களே இவவாறு நாடு கடத்தப்படவுள்ளனர்.

விசேட விமானமொன்றின் மூலம் இவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

சுவீடனில் தங்கியுள்ள இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கணக் கெடுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் சுவீடன் அரசாங்கம் இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் சுவீடனில் தஞ்சமடைந்துள்ளனர்.

# நோயாளிகளின் உரிமைகள் தயாராகிறது சட்டமூலம்

மருந்துப்பொருட்கள், வைத்திய கருவிகள், ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் சத்தூட்டிய உணவுகள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கான சட்டம் எனும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென சுகாதார அமைச்சரை நீதிமன்றம் பணிக்க வேண்டுமென கேட்டு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போது இரண்டு தரப்பு வழக்குரைஞர்களும், நோயாளிகளின் உரிமைகள் பற்றிய சட்டமூல வரைவு தயாராக உள்ளதெனவும் அது விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது எனவும் கூறினர். இதனால், இந்த விடயத்தை பிந்திய ஒரு நாளில் விசாரணைக்கு எடுக்க வேண்டுமென அவர்கள் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டனர். பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் மற்றும் ரோஹினி மாரசிங்க ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழாம், இந்த மனுவை ஒக்டோபர் 21 இல் திரும்பவும் விசாரணைக்கு எடுப்பதாக அறிவித்தது.

# வெளிநாட்டு தொழிற்பயிற்சித்திட்டம் சிகரம் நிறுவனத்தால் அறிமுகம்



(சிகரம்)

வெளிநாட்டுப் பயணம், தொழில்வாய்ப்புக்களில் நாட்டம் கொண்ட இளைஞர்,யுவதியருக்கு, அங்கே அதிகளவு வருமானத்துடன் இலகுவில் தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உதவும் வருமானத்துடனான தொழிற்பயிற்சித் திட்டமொன்றை சிகரம் நிறுவனம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்குகள் கடந்த 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக சிகரம் நிறுவனத்தால் இந்த மூன்று மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க விரும்புபவர்கள் முதலில் அங்கே என்னென்ன தொழில்களைச் செய்து பணம் சம்பாதிக்க முடியும் என்பதை அறிந்துகொண்டு, அந்தத் தொழில்களைச் செய்வதற்கான தொழிற்தகைமைகளை ஏற்படுத்திக்கொண்டு அங்கு சென்றால், இலகுவில் தொழில்வாய்ப்பைப் பெற்று அதிகளவு வருமான மீட்ட முடியும் என சிகரம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் இந்தக் கருத்தரங்குகளில் விளக்கினார்.

வெளிநாடுகளில் இலகுவில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய துறைகளில் தொழிற்பயிற்சிகளை மாத வருமானத்துடனேயே வழங்கும் மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE திட்டம் குறித்தும் இங்கு விளக்கிய அவர், வளர்ச்சியடைந்த எந்த வொரு நாட்டிலும் இலகுவில் வேலைவாய்ப் பொன்றைப் பெற்று அதிக வருமானமீட்டக்கூடிய ஹொட்டேல் தொழில்துறை தொடர்பாகவும் கருத் தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குகளில் மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE திட்டத்தை உயர்தரத்தில் செயற்படுத்தி வரும் SEGi பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி றயான் கொக்(Rayan Kok) உம் வருமானத்துடனான இந்தப் பயிற்சிநெறி தொடர்பில் விளக்கமளித்தார்.

மலேசியாவில் மட்டுமன்றி உலகின் பல வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளிலும் ஹோட்டேல் துறையில் ஏராளம் வேலைவாய்ப்புகள் காணப்படுவதாகவும், ஆனால், அவற்றில் பணியாற்றுவதற்கு முறையான பயிற்சிபெற்ற பணியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் குறிப்பிட்ட SEGi பல்கலைக்கழகப் பிரதிநிதி ரயான், இந்தத்துறையில் ஒருவர் முறையான பயிற்சிகளைப் பெற்றிருப்பாராயின் அவர் எல்லையற்ற வருமானமீட்ட முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஒரு வருட காலத்தைக் கொண்ட இந்தத் தொழிற்பயிற்சிநெறியைத் தொடரும் மாணவர்களுக்கு, பயிற்சிநெறிக் காலத்தில் மாதம் 50,000 ரூபாவுக்கும் அதிகமான பயிற்சிக்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், பயிற்சிநெறி முடிவில் Work Perஅவை உடன் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றன.

பயிற்சிநெறி நிறைவில், மலேசிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் Skills Malaysiya INVITE சான்றிதழுடன் , பிரித்தானியாவின் University of East london Global Examination சான்றிதழ், சர்வதேச அங்கீகாரம் கொண்ட City & Guilds(UK)>



AETS (Australia) சான்றிதழ் ஆகியவற்றை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால், இவற்றுடன், உலகின் எந்தப் பகுதியிலும் ஹோட்டேல் தொழில்துறையில் வேலைவாய்ப்புக்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

க.பொ.த சாதாரணதரச் சித்தியுடனோ அல்லது 9 வருட பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த எவரும் இந்தப் பயிற்சிநெறியைத் தொடர முடியும்.

இந்தப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் நேரடியாக, இலக்கம் 153, பலாலி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியிலுள்ள சிகரம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளி நற்சிந்தனை...

### பக்தி இன்றி முழுமை பெற்ற வாழ்க்கை இல்லை!

இப்போதெல்லாம் பக்தி சுயநலம் மிக்கதாகி விட்டது. மூட நம்பிக்கையும் அதிக மாகி விட்டது. சமூக விரோத காரியங்களுக்குக்கூட பக்தி பயன்படுகிறது.

நெருக்கடி தீரவும், ஆசைகள் நிறைவேறவும் மனிதர்கள் கடவுளின் அருளை நாடுகிறார்கள். ஆரோக்கியம் வேண்டும். என்று ஒருவர் பிரார்த்திக்கிறார். மற்றொருவருக்கு பணம் தேவை. இன்னொருவருக்கு உத்தியோக உயர்வு வேண்டும். வேறு ஒருவருக்கு பரீட்சையில் தேற வேண்டும். இவ்வாறு எத்தனையோ அடிப்படையில் பக்தி உருவாகிறது.

கடவுள் உடனடியாகக் கோரிக்கையைக் கவனிக்காவிட்டால் உடனே அவர்கள் கடவுளைப் புறக்கணிக்கவும் துணிந்து விடுகிறார்கள். சுருங்கச் சொன்னால், மதமும் பக்தியும் வியாபார பேரமாகி விட்டன.

எந்தக் காரணம் பற்றியாவது கடவுளை நினைப்பது நல்லது தான். ஆனால் பக்தி உயர்வான நிலையில் உருவாக வேண்டும். மெய்யான பக்திக்கு நோக்கம் இருக்கக் கூடாது. அப்பழுக்கற்ற ஒழுக்கத்தில், தன்னலமற்ற அன்பில் அர்ப்பணிக்கப்பட்ட சேவையில் பக்தி வெளிப்பட வேண்டும். அனுமான், பிரகலாதன், சுகர் ஆகியோரின் பக்தி ஒரு எடுத்துக் காட்டு. சுகர் ஆத்ம தரிசனத்தில் திளைத்தவர், பந்தங்களிலிருந்து விடுபட்டவர். யாரையும் வழிபட வேண்டிய அவசியம் அருக்கு இல்லை. இருந்தாலும், அவர் இறைவனை வழிபட்டார். பிரகலாதனின் பக்தியும் இது போன்றது தான்.

மதம் என்பது வெறும் ஒழுக்கக் கோட்பாடுகளை மட்டும் உள்ளடக்கியது இல்லை.ஒருவன் ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழலாம். கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றிக்கொண்டிருக்கலாம். பொறுப்புக்களைத் திறம்படக் கவனித்துக் கொண்டிருக்கலாம். இருந்தும், அவர்கள் இறைவனிடம் அன்பு செலுத்த தவறிவிடுவார்களானால் அவர்களுடைய தர்மம் பயனற்றுப் போகிறது. தெய்வ பக்தி இல்லாமல் யாராலும் முழுவளர்ச்சி அடைய முடியாது.

**சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

சாதி, இனம், மதம், மொழி, இயக்கம், தத்துவம், தேசம், பால், வட்டாரம் சார்ந்த நம் அடையாளங்கள் பன்முகங் கொண்டவை. காலத்திற்கேற்பச் சில வலுப்பெறுகின்றன. சில மங்குகின்றன. சுய அடையாளத்தைப் பன்முகத்தன்மை உடையதாய்க் காண்பது பிற அடையாளங்களை மதிக்க உதவுகிறது. இயக்கங்கள் இவற்றில் ஒன்றைப் பிரதானப்படுத்துகின்றன. அல்லது புதிய அடையாளம் ஒன்றை முன்னிறுத்துகின்றன. தான் முன்னிறுத்தும் அடையாளம் தவிர்ந்த பிற அடையாளங்களை இயக்கம் அழிக்க முற்படும்போது அது சாவாதிகாரத் தன்மையை அடைகிறது. மாறுபட்ட நிலைப்பாடுகளில் இயங்குபவர்களைத் துடைத்தெறிய விரும்பும் வன்முறையாளர்களாகிறார்கள்.

**– காலச்சுவடு ஜனவரி 95 ஆசிரியத் தலையங்கத்தில்**

நம்மைச் சுற்றிய நிகழ்வுகள் அனைத்தையும் நாம் தொன்மங்கள், புராணங்கள், தேவதைக் கதைகள், வரலாறுகள் என்று எத்தனை எத்தனையோ புனைவுகளின் வழியாகவே விளங்கிக் கொள்கிறோம். ஆனால் இந்தப் புனைவுகளைப் பற்றிய உணர்வு இல்லாமல் எல்லாவற்றையும் முழுமையாகவும் சார்பின்றியும் புரிந்துகொண்டதாக நம்புவதும், அவற்றைப் பிரதிபலித்துவிட்டதாக எண்ணுவதுமே எதார்த்தவாதத்தின் அடிப்படை. எனினும் கடந்த சில பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் இப்புனைவுகள் பற்றிய ஒரு தன்னுணர்வை மனிதனுக்கு ஏற்படுத்தியுள்ளன. எதார்த்தம், உண்மை என்பனவெல்லாம் எத்தனை போலியானவை என்பதை அன்றாட நிகழ்வுகள் அவனுக்குத் திரும்பத் திரும்ப உணர்த்துகின்றன. எந்த எதார்த்தவாதப் படைப்பும் 'உண்மையை' அப்படியே பிரதிபலித்து விடுவதில்லை. எல்லாமே சில தேர்வுகள், வரிசைப்படுத்தல்கள் என்கிற அடிப்படையில் புதிய எதார்த்தத்தைக் கட்டமைக்கவே செய்கின்றன என்பதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

**– அ.மார்க்ஸ்**

பாசிசத்துக்கான வெகுமக்கள் ஆதரவு ஏன் என்பதற்கு காரணம் இருக்கிறது. பாசிசம் மனித மனத்தில் அறிவை (Reason) அழித்து உணர்வையே (Emotion) அதிகம் பிரதானப்படுத்துகிறது.

**– கண்காணிப்பின் அரசியல் நூலில்**

'தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை மடத்தனமாக்கும்' செயல்பாடுகளுக்கு பின்னர் புலம்பெயர் ஈழத் தமிழர்களின் ஆவேசமான ஆதரவு இருக்கிறது. பெருமளவுக்கு பணம் அனுப்பப்படுகிறது. இனவெறியர்களுக்கு மேற்கு முழுவதும் சுற்றுப் பயணங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. தமிழ் இனவாதிகளுக்கு ஐரோப்பிய தமிழ் தொலைக் காட்சிகளில் கொடுக்கப்படும் வாய்ப்பு நிச்சயமாக தமிழக ஊடகங்களில் இல்லை. இவர்களின் பாசிச உரைகளை நேரடி ஒளிபரப்பு செய்கின்றன ஐரோப்பிய தமிழ் தொலைக்காட்சிகள். ஈழத் தமிழர்களுக்கு எப்போது விடிவுகாலம் வரும் என்று கிளி ஜோசியர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நகைச்சுவை லட்சணங்கள் பொருந்திய தமிழக சேகுவேராக்கள், ஹிட்லர்கள், முகநூல் புரட்சியாளர்கள் ஆகியோரிடம் கேட்கப்பட்டு அவர்களுடைய பதில்கள் தேவதூதர்களுக்கு உரிய முக்கியத்துவத்துடன் பெறப்படுகின்றன. புலம் பெயர் தமிழர்களின் இத்தகைய செயல்பாடுகளால் தமிழகத்தில் கருத்துச் சுதந்திரத்திற்கான இடம் சுருக்கப்பட்டு பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

**– காலச்சுவடு கண்ணன்**

பொதுவாக தமிழர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்கிறார்கள். இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்தபடி 15ஆம் நூற்றாண்டு வரலாற்று பண்பாட்டை சிலாகித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு கற்பனையில் எப்போதும் பின்புறம் ஒரு வால் ஆடிக் கொண்டிருக்க வேண்டும். அது அவர்களுக்கு சமகால வாழ்வின் அடையாள நெருக்கடிகளில் இருந்து ஒரு சின்ன ஆறுதல் அளிக்கும்.

**– அபிலாஷ்**

தமிழ் நடுத்தர வர்க்கமானது எப்பொழுதும் தற்காப்பு நிலையிலிருந்தே சிந்திக்கும். தனது நிலையான நலன்களையும் தனது சந்ததியின் நிலையான நலன்களையும் பாதுகாக்கும் அதேசமயம், சாகச உணர்வுமிக்க தீவிர இனமான அரசியலை அது பேசும். தனது பிள்ளைகளை படிப்புக்கு மேல் படிப்பு படிக்க வைத்து அவர்களுக்கொரு பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்த விளையும் அதேசமயம் யாருடையதோ பிள்ளைகளின் தியாகத்தையும் வீரத்தையும் அது தலைமேல் வைத்துக்கொண்டாடும். தங்களுடைய பிள்ளைகளுக்கு புலமைப்பட்டம் யாருடையதோ பிள்ளைகளுக்கு தியாகிப் பட்டம் – இது தான் படித்த தமிழ் நடுத்தரவர்க்கம்.

**– நிலாந்தன்**

# தமிழருக்கான அரசியல் தீர்வை முன்வைத்துள்ளது கூட்டமைப்பு

## கூறுகிறார் சுரேஷ் எம்.பி.

(பாரிஸ்)

தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக முன்வைத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான புதுடில்லியின் கருத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவதால், இந்தியாவின் போக்கில் உறுதியான மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளன

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், பாரிசில் இணையத்தள மொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதுடில்லிப் பயணம், 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான சர்ச்சைகள், புலம்பெயர் தமிழர்கள் குறித்த கேள்விகளுக்கு, தனது செவ்வியில் சுரேஷ் பதிலளித்தார்.

புதுடில்லிக்கு நாம் முன்னர் மேற்கொண்ட பயணங்களை விட, இம்முறை மேற்கொண்ட பயணம் வித்தியாசமானது.

அரசு மீது, புதுடில்லியில் பெரியளவில் அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அரசு நம்பத்தகுந்த சக்தியல்ல என்ற கருத்தும் அவர்களிடம் உள்ளது.

போர் முடிந்த பின்னர், தமிழர்களின் பிரச்சினை தீர்க் கப்படும் என்று இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட உறுதிமொழி மீறப்பட்டுள்ளது.

அதேவேளை, சீனாவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றையும் செய்து கொண்டுள்ளது.

பாரிய அபிவிருத்திப் பணிகள் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், பெருந்தொகையான சீனர்கள், குறிப்பாக வடக்கில் நடமாடும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

இது இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்த விடயமல்ல.

இதேபோன்று 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று பிரச்சினைகளைத் தீர்ப்பேன் என்று ஜனாதிபதி இந்தியாவுக்கு வழங்கிய உறுதி மொழியும் மீறப்பட்டுள்ளது.

இவைபோன்ற காரணங்களால், இலங்கை மீது அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு தோன்றியுள்ளது.

இந்த விடயங்களில், இலங்கை தனது நிலையை மாற்றிக் கொள்ளாவிட்டால், அது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தம் தொடர்பாக இடதுசாரிக்கட்சிகளும், சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் சில கட்சிகளும், முற்போக்கு எண்ணம் கொண்ட ஒரு சில அமைச்சர்களும் பேசத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளது.

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு, புலம் பெயர் தமிழ் மக்கள் காத்திரமான பங்கை தொடர்ச்சியாக வழங்கி வருகிறார்கள்.



இது ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறது.

தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக கூறிவந்துள்ளது.

அத்தகையதான தீர்வு ஒன்று ஏற்பட்டால், புலம்பெயர் மக்களும் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று பூரணமாக நம்புகிறோம்.

அவ்வாறான தீர்வை அரசாங்கம் முன்வைக்காத வரை புலம் பெயர் மக்களின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தரமற்ற எரிபொருள் இறக்குமதி நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில்

உரிய தரத்தைக் கொண்டிராத எரிபொருளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் இணைக்க பெற்றோலிய வளத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது வேறு நிறுவனத்தின் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் உரிய உள்ளடக்கங்களைக் கொண்டிராத காரணத்தினால் அண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறித்த எரிபொருள் உரிய உள்ளடக்கங்களைக் கொண்டிராமை கண்டறியப்பட்டமையினால் அவை நிராகரிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

தற்போது போதியளவு கையிருப்பு தம்மிடம் இருப்பதாகவும் விரைவில் வேறு நிறுவனத்திடம் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் அனுரபிரியதஷன யாப்பா மேலும் குறிப்பிட்டார்.

## போக்குவரத்தில் விமோசனம் குட்டியப்புல மக்கள் கோரிக்கை

போக்குவரத்துச் செய்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக வயாவிளான் குட்டியப்புலம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா? என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயப் பிரதேசமாகக் காணப்படும் இப் பிரதேசம் போக்கு வரத்து வசதிகளற்ற கிராமமாக காணப்படுகின்றது.

பலாலி வீதிக்கும் பருத்தித்துறை வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் இப் பிரதேசம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்திலி ருந்து வெளியிடங்களுக்கு பயணம் செய்யவேண்டுமானால் கிழக்கே பருத்தித்துறை வீதிக்கோ அன்றி மேற்கே பலாலி வீதிக்கோ வர வேண்டும்.

இந்த வீதிகள் இரண்டும் சுமார் நான்கு, ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளன. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கைப்போக்குவரத்துச் சபையோ அன்றி தனியார் மினிபஸ் சங்கத்தினரோ நாளாந்தம் மூன்று சேவைகளை காலை, மதியம் பிற்பகல் நடத்தினால் கூட பெரும் நன்மையாக இருக்கும் என அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் காணி சுவீகரிப்பு எதிர்த்து ஜனநாயக போராட்டம்

### மாவட்ட பிரஜைகள் குழு முடிவு



வவுனியா மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்புக்கு எதிராக, ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்த வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு முடிவு செய்துள்ளது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் சிறப்புக் கூட்டம் இந்திரன்ஸ் விருந்தினர் விடுதியில் பிரஜைகள் குழுவின் உப தலைவர் தனஞ்சயநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முல்லைத் தீவு, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுக்களின் காப்பாளரும், மனித உரிமை ஆர்வலருமான சண் மாஸ்டர் மற்றும் தலைமைக குழு உறுப்பினர்கள், மாவட்டத்தின் பிரதேச இணைப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் போது, ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசம் சார்ந்து, மக்கள் சார்ந்து பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு, கருத்தொருமைப்பாட்டுடன் மாவட்ட மக்களின் நலன்சார்ந்த முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் பிரதேச ரீதியாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் காணி சுவீகரிப்பிற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லுதல் முதன்மைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதோடு, இனங்களுக்கிடையில் முரண்நிலையை ஏற்படுத்தும் வகையில் நியாயமற்ற முறையில் வழங்கப்படும் காணி முறையை நிறுத்தக்கோருதல், அரச திணைக்களங்களில் சேவைக காலத்தை கவனத்தில் கொள்ளாமல் வழங்கப்படும் முறையற்ற நியமனங்கள், ஆளணி உள்ளீர்ப்புகள், பணி இடமாற்றங்களை நிறுத்தக்கோருதல், இந்திய உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வீடுகளை போரினால் பாதிகப்பட்ட அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசெல்லுதல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

## கொலைக் குற்றச்சாட்டில் கைதான மாணவனுக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பாஷையூரில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 வயது மாணனுக்கு யாழ். மேல் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை பிணை வழங்கியுள்ளது.

23 வயதான இளைஞர் அல்பேட் பீரிஸ் கனிஸ் தயான் என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட என்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவனுக்கே இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

2012 டிசம்பர் 29 ஆம் திகதி பாடசாலை மாணவி ஒருவரின் துவிச்சக்கர வண்டி சாவியினை சந்தேகநபர் கழற்றி விளையாடியக் கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் சக மாணவனான அல்பேட் பீரிஸ் கனிஸ் தயான் மாணவியின் சாவியை கொடுக்குமாறு கேட்டபோதே அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக மாணவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

குறித்த சிறுவன் அன்றைய தினமே யாழ். பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சான்று பெற்ற சிறுவர் பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனையின் போது கத்திக் குத்து காயத்தினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் உயிரிழந்துள்ளதாக தெரியவந்ததைத் தொடர்ந்து சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவனின் மேற்படி வழக்கினை கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மாணவனை 10 ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும், 2 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணையிலும் செல்ல அனுமதித்ததுடன், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும், யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் எஸ்.பரமராஜா உத்தரவிட்டார்.

§25)

## சிங்காவத்தை மக்களுக்கு 50 வருடமாக மின்சாரமில்லை

தெல்லிப்பளை துர்க்காபுரம் பகுதியில் அமைந்துள்ள சிங்காவத்தை மக்கள் மின்சாரம் இன்றி சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிங்காவத்தைப் பகுதியில் தற்போது சுமார் பதினைந்து குடும்பங்கள் வரை மின்சாரமின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

போக்குவரத்து வசதி இன்மையைக் காரணம் காட்டி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பதாக அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் இல்லாத கிராமங்களின் விபரங்களை பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக எடுக்கும் சந்தர்ப்பங்களிலும் இக் கிராமம் ஒதுக்கப்படுவதாக அம் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.


இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து பாதை தற்போது சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் இனியேனும் இக்கிராமத்திற்கு மின்சார வசதியைப் பெற்று கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

04. அப்பியாசப் புத்தகமொன்றின் விலை ரூபாய் 17.00 ஆகும். அதன்படி, ரூபாய் 100.00 இற்கு எத்தனை அப்பியாசப் புத்தகங்கள் வாங்கலாம்? .............................. மீதிப்பணம் யாது? ..............................


05. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் போது மூன்று நாடுகளின் வீர வீராங்கனைகள் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


| நாடுகள் | வீரர்கள் | வீராங்கனைகள் | பதக்கங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| ரஷ்யா | 160 | 90 | 67 | 35 | 34 |
| அமெரிக்கா | 172 | 75 | 74 | 65 | 48 |
| சீனா | 146 | 88 | 76 | 58 | 35 |

1. சீனா பெற்றுக்கொண்ட பதக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................
2. மூன்று நாடுகளும் பெற்றுக்கொண்ட வெள்ளிப்பதக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................
3. ரஷ்யாவிலிருந்து பங்குபற்றிய வீர வீராங்கனைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

06. 
இக்கடிகார முகம் தற்போதைய நேரத்தை காட்டுகிறது. இன்னும் 40 நிமிடங்களில் நான் வீட்டிலிருந்து வெளியேறுவேன். அதன்படி, நான் வீட்டிலிருந்து வெளியேறும் நேரம் யாது? ..............................

07. குவியல் ஒன்றிலிருந்த தோடம்பழங்களை 4 சம குவியல்களாகப் பகிர்ந்த போது குவியல் ஒன்றில் 38 தோடம்பழங்கள் இருந்தன. குவியலில் இருந்த தோடம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

08. 
இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்கள்? ..............................



09. அருகே உள்ள திண்ம உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

10. ஒரு பண்ணையில் உள்ள ஆடுகளினதும், கோழிகளினதும் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 48 ஆகும். அப்பண்ணையில் உள்ள ஆடுகள் எத்தனை? ..............................

11. ஓர் இலக்கத்தை 10 ஆல் பெருக்கி 5ஆல் வகுத்து 4ஐக் கூட்டினால் வரும் விடை 24 ஆகும். அவ்விலக்கம் யாது? ..............................

12. சதுரமுகி ஒன்றின் ஒரு விளிம்பினது நீளம் 6cm எனின் அச்சதுரமுகியின் காணப்படும்விளிம்புகளில் மொத்த நீளம் யாது? ..............................

(30 புள்ளிகள்)

(13) அன்று பாடசாலை செல்ல எனக்கு தாமதமாகிவிட்டது. வீட்டில் இருந்து வேகமாக ஓடோடி வெளியில் வந்தேன் அருகில் உள்ள கல்லொன்றில் தடுக்கி விழுந்து விட்டேன்... இதைத்தொடர்ந்து கருத்துள்ள நான்கு வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களைக்கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.

01. ..............................

02. ..............................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

1.30 மணி



(1) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

டெங்குக் காய்ச்சல் வைரஸ்கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும். ஈடிஸ், ஈஜிப்டய், ஈடிஸ் அல்போபிக்டெஸ் என்னும் இரு வகை நுளம்புகளினால் பரவுகின்றது. டெங்குக் காய்ச்சலை நாம் தடுக்க என்ன செய்ய வேண்டும்? டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பரவாமல் தடுக்க வேண்டும். மற்றும் டெங்கு நுளம்புகள் முட்டையிடும் இடங்களின் வாய்ப்புக்களை குறைத்தாக வேண்டும். அதற்கு வெற்றுத் தகர டப்பாக்கள், போத்தல்கள், சட்டி பானைகள் பயன்படுத்தப்பட்ட யோகட் கோப்பைகள் முதலியவற்றை நீர் தேங்காமல் உடைத்து துண்டுகளாக எறிதல் வேண்டும். வீட்டில் பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகளில் உப்புக்கட்டி ஒன்றை இடுவதன் ஊடாக நுளம்புப் பெருக்கத்தை தடுக்க முடியும்.

1. பந்தியினூடு வெளிப்படுத்தப்படும் கருத்து யாது? ..............................
2. நோய் என்ற சொல்லுக்கான ஒத்தசொல்லை தருக? ..............................
3. டெங்குக் காய்ச்சலை பரப்பும் நுளம்புகள் எவை? ..............................
4. நீர் தேங்கி கிடக்கும் பொருட்கள் எவை? ..............................
5. நுளம்புப் பெருக்கத்தை தடுக்கும் முறை ஒன்றை குறிப்பிடுக? ..............................
6. பூச்சாடி என்பதை பிரித்தெழுதுக? ..............................
7. அஃறிணை, ஒருமை, நிகழ்கால வினைச் சொல்லை தருக? ..............................

(2) பின்வரும் தொடர்களுக்கு பொருத்தமான கருத்தை எழுதுக.

1. வானளாவ .............................. 2. உள்ளம் குளிருதல் ..............................

(3) பின்வரும் வாக்கியங்களில் வரும் தடித்த எழுத்தில் அமைந்துள்ள தொடருக்கான கருத்தை எழுதுக.

1. நாம் எவரையும் **அலைக்கழித்தல்** கூடாது. ..............................
2. அவரை **அண்டப்புழுகன்** என கூறுவர். ..............................

(4) அடைப்பினுள் உள்ள எழுத்துக்களில் இருந்து பொருத்தமான எழுத்தை தெரிவு செய்து கீழே உள்ள சொற்களை பூரணப்படுத்துக.

(ர, ள, ல, ழ, ற, ன, ண)

1. வ.........க்கு 2. குவ.........யம் 3. மாகா.........ம் 4. வத.........ம்

(5) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.

1. வலையில் / எதிர்பார்த்தபடி / அவன் / சிக்கிக்கொண்டது / ஒரு / கொண்டைக்குருவி

**(6) பின்வரும் வாக்கியத்துக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. இளவேனில் ஆண்டு மாலை சித்திரை வாரம் நிமிடம் - இவை எவற்றைக்குறிக்கின்றன.

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.** (04 புள்ளிகள்)

1. Where is the chalk .................................. 2. Third Day ..................................

**(8) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.** (04 புள்ளிகள்)

1. புத்தாண்டு வாழ்த்துக்கள் .................................. 2. கறுப்பு நாய் ..................................

**(9) சிங்களச் சொற்களுக்கு பொருத்தமான கருத்தினை தமிழில் எழுதுக.** (04 புள்ளிகள்)

1. பந்தி(B)பார(G)குறு(த்)துமா .................................. 2. கஞுலேல்ல ..................................

**(10) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடையாளப்படுத்துக.** (04 புள்ளிகள்)

1. இரவு வானை அவதானிக்கும் போது நட்சத்திரங்கள் விட்டு விட்டு ஒளிதருவதை அவதானிக்கலாம். ( )
2. ஹட்டன் பீட பூமியில் இருந்து மகாவலிகங்கை உற்பத்தியாகின்றது. ( )
3. இலங்கையின் கரையோரச் சமவெளிகளில் காணப்படும் நகரங்களில் ஒன்று தான் திருகோணமலை. ( )
4. அம்பாந்தோட்டை துறைமுகம் இயற்கையான அமைப்பில் உருவானதாகும். ( )
5. அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட தாள் காசுகளில் இலங்கையின் தனித்துவம் பேணப்படுகின்றது. ( )

**(11) சரியான விடையின் கீழ் கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. ஒன்றுக்கொன்று எதிரான இதழமைப்புக் கொண்ட பூ எது?
   1. கடதாசிப் பூ 2. மல்லிகைப் பூ 3. அகத்திப் பூ 4. பொபிமலர்

2. 
   இத்தாவரமானது
   1. மரமஞ்சள் 2. வெற்றிலை
   3. மிளகு 4. சிந்தில்

3. சுவர்களில் தடவிய சுண்ணாம்பை மட்டுப்படுத்துவதற்கு உகந்தது.
   1. மட்டப்பலகை 2. மணியாசு 3. பரம்புப்பலகை 4. சுரண்டுக்கருவி

4. மலையகமும் காரியமும் என்ற பருவ இதழின் ஆசிரியர்
   1. டி.பி. ஜயதிலக்க 2. ஆனந்தசமரகோன் 3. பொன். இராமநாதன் 4. ஆனந்தகுமாரசுவாமி

5. அரச இலட்சினையில் 'மலரிதழ்' குறிக்கும் கருத்தானது?
   1. தாய்மை 2. தன்னிறைவு 3. நீதி 4. தருமம்

6. வீட்டுத்தோட்டத்திற்கு வரும் பூச்சிகளை அழிக்கக்கூடிய வழிகளில் ஒன்றல்லாதது.
   1. முசுறுக்கூட்டை போடல் 2. சாம்பல் தூவுதல்
   3. வேப்பெண்ணெய்யைத் தெளித்தல் 4. சுண்ணாம்புத்தூளை விசிறுதல்.



7. ஆங்கிலேயர்களால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட ஆண்டு.
   1. 1945 2. 1948 3. 1815 4. 1915

8. எலஹர கால்வாயை கட்டிய மன்னன்?
   1. வசபன் 2. துட்டகைமுனு 3. காசியப்பன் 4. தாதுசேனன்

9. ஆபத்து வேளைகளில் தன்குஞ்சுகளை சிறகினில் மறைத்துக் கொள்ளும் பிராணி.
   1. வாத்து 2. புறா 3. சேவல் 4. கோழி


10. 
    இக்குறியீடு உணர்த்துவது
    1. முன்னால் வாகனம் செல்லத்தடை
    2. முன்னால் பாதை வேலை
    3. பாதை வேலைக்காக வீதி மூடப்பட்டுள்ளது
    4. வீதி திருத்தப்படுகிறது.

11. 
    இச்சைகை உணர்த்துவது?
    1. பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துதல்.
    2. முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துதல்.
    3. முன்னால் வரும் வாகனத்தை அழைத்தல்.
    4. இடது பக்கத்திலிருந்து வரும் வாகனத்தை நிறுத்துதல்.

12. தாவரங்களின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பது.
    1. ...நுளம்பு 2. ஓணான் 3. நத்தை 4. புழு

13. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திரப்புகழ் வாய்ந்த நகரம்.
    1. திருகோணமலை 2. கதிர்காமம் 3. களுத்துறை 4. கொழும்பு

14. குளத்தில் சேரும் மேலதிக நீரை வெளியேற்ற பயன்படும் குளத்தின் பகுதி.
    1. மடைக்கதவு 2. கலிங்கற்றொட்டி 3. சுருங்கை 4. வான்கதவு

15. சூரிய நமஸ்கார பயிற்சியில் இரண்டாம் கட்டத்தைக் குறிக்கும் உரு.
    
    1. 2. 3. 4.


**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.** (15 புள்ளிகள்)

01. வட்டத்தில் உள்ள எண்களைப்பயன்படுத்தி மிகச்சிறிய ஐந்திலக்க எண் ஒன்றை உருவாக்கி எழுதுக?
    (4 5 1 8 9)
    ..................................

02. நீர்த்தாங்கியொன்றில் 9 லீற்றர் 650மில்லிலீற்றர் நீர் இருந்தது நீர்த்தாங்கியிற்கு இன்னும் 12 லீற்றர் 650 மில்லிலீற்றர் நீர் சேர்த்தால், நீர்த்தாங்கியில் இருக்கும் நீரின் அளவு யாது?
    ..................................

03. ஏறுவரிசையில் எழுதுக. $\frac{1}{2}, \frac{14}{16}, 0.75, \frac{1}{8}, \frac{1}{4}$ ..................................

## கோலாகலமாக நடந்தேறிய ஜி.வி.பிரகாஷ் - சைந்தவி திருமணம்



பிரபல இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்குமார் - பின்னணிப் பாடகி சைந்தவி திருமணம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ்குமாரும் பாடகி சைந்தவியும் பல ஆண்டுகளாகக் காதலித்து வந்தனர்.

இரு தரப்பு பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து இரு ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்தனர்.

அதன்படி இருவருக்கும் நேற்றுமுன்தினம் ஹோட்டல் ரெயின் ட்ரீயில் நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த நிகழ்ச்சியில், இருவரும் ஒருவருக்கொருவர் மாற்றி மோதிரம் அணிவித்துக் கொண்டனர்.

நேற்றுக் காலை இருவருக்கும் சென்னை மேயர் ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

திருமணத்துக்கு திரளான நட்சத்திரங்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியுள்ளனர்.

முன்னணி நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், அரசியல் பிரமுகர்கள் என அனைவருமே திருமணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

# உத்தரகாண்டைத் தொடர்ந்து ஒடிசாவிலும் வெள்ளப்பெருக்கு

## 63 கிராமங்கள் பாதிப்பு

உத்தரகாண்டை தொடர்ந்து ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் கோவிந்த் சந்த்ரா ஷெட்டி கூறுகையில்,

மாவட்டத்தில் உள்ள காலம்பூர், ஜுனாகர்க் மற்றும் ஜெய்பட்னா ஆகிய மண்டலத்தில் உள்ள சாலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் 1,731 வீடுகள் சேதமடைந்துள்ளன.



இந்தியச் செய்திகள்

சுமார் 63 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியில் வசித்து வந்த 30 ஆயிரம் மக்களும் பாதிப்படைந்துள்ளனர். பெல்ஹாண்டி பகுதியில், எட்டாம் நூற்றாண்டை சேர்ந்த சிவன் கோவில் ஒன்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் சூழ்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும், மீட்புக் குழுவினர் தொடர்ந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# குவியல், குவியலாக எரிக்கப்படும் வெள்ளத்தில் உயிரிழந்தோர் சடலங்கள்

வட இந்தியாவில் வெள்ளத்தில் பலியானவர்களை ஒட்டுமொத்தமாக எரிக்கும் பணிகள் நடக்கின்றன. வெள்ளத்தினாலும், நிலச்சரிவினாலும் 800 இற்கும் அதிகமானோர் அங்கு இறந்துள்ளனர்.

மோசமான காலநிலையால் ஏற்பட்ட தாமதத்தை அடுத்து கோயில் நகரான கேதாரநாத்தில் குறைந்தபட்சம் 200 சடலங்களாவது ஒன்றாக எரிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருக்கும் நிவாரண முகாம்களில் தொற்று நோய்கள் ஏற்படும் ஆபத்துக் குறித்து தொண்டர் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

வெள்ளம் ஆரம்பித்து 11 நாட்கள் ஆன பின்னரும், இமாலய மலையின் பல பாகங்களில் அகப்பட்டிருக்கும் ஆயிரக்கணக் கான மக்களை மீட்கும் பணிகளில் மீட்புப் பணியாளர்கள் இன்னமும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு இலட்சம் பேர் வரையிலானோர் இதுவரை தமது இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். மலைகளில் அகப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களையும், சுற்றுலாப்பயணிகளையும் மீட்பதற்காக இராணுவம் ஹெலிகொப்டரைப் பயன்படுத்துகிறது.

செவ்வாயன்று நடந்த மீட்புப் பணியில் ஈடுபட்ட ஹெலிகொப்டரின் விபத்தில் 20 பேர் பலியானதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

உத்தராகாண்டில் இந்த வருடத்தில் மழைக் காலத்துக்கு முன்பாகவே ஆரம்பித்துவிட்ட கடுமையான மழை, கடந்த 80 வருடங்களில் பெய்த மிகவும் பெரிய மழையாகும்.



பெருக்கெடுத்த ஆறுகள், அந்த மாநிலத்தின் அனைத்துக் கிராமங்களையும் அடித்துச் சென்றுவிட்டன.

இலகுவில் சென்றடைய முடியாத பகுதிகளில் இருந்து பலியானவர்களின் எண்ணிக்கை கிடைக்கும் போது இறந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் பல மடங்கு அதிகரிக்கலாம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

# 39 இணையத்தளங்களை முடக்கியது மத்திய அரசு

இந்தியாவில் இணையத்தளத்தில் சென்றால் யார் வேண்டுமானாலும் ஆபாசப்படம் பார்க்கலாம் என்ற நிலை உள்ளதனால் இளைய சமுதாயம் சீரழியும் நிலை உருவாகி இருப்பதாக மத்திய அரசுக்கு ஏராளமான புகார்கள் வந்தன.

அத்துடன், ஆபாசப்படங்கள் வெளியிடும் இணையத்தளங்களை தடை செய்யவேண்டும் என்றும் கோரிக்கைகள் விடப்பட்டதனால் இது பற்றி மத்திய அரசு ஆலோசனை நடத்தி வந்தது. இணைய தள இணைப்புகள் தொலைத் தொடர்புத்துறை மூலம் உபயோகிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. எனவே ஆபாசப்படங்கள் வெளியிடும் இணையத்தளங்களை தொலைத் தொடர்புத்துறை மூலம் முடக்கலாமா என்று மத்திய அரசு ஆலோசனை நடத்தியது.

எந்தெந்த இணையத்தளங்கள் ஆபாசப்படங்களை வெளியிடுகின்றன என்பதை தொலைத் தொடர்புத்துறை ஒழுங்கு முறை ஆணையம் கண்காணித்ததில் 39 இணையத்தளங்கள் முறைகேடாக ஆபாசப்படங்களை வெளியிட்டு வருவது கண்டுபிடித்தது.

இது போன்ற ஒளிபரப்புகளை தடுக்க சட்டத்தில் இடம் உள்ளதா என்றும் ஆலோசிக்கப்பட்டு அதற்கான சட்ட விதிமுறைகளும் ஆலோசிக்கப்பட்டன. இதையடுத்து, இந்தியாவில் 39 இணையத்தளங்கள் முடக்கப்படுகின்றன.

# தைரியமிருந்தால் தொட்டுப்பாருங்கள் மாவோயிஸ்டுகளுக்கு மம்தா சவால்

தம்மைக் கொல்லப் போவதாகப் கூறும் மாவோயிஸ்டுகளுக்கு தைரியம் இருந்தால் தொட்டுப் பாருங்கள் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி சவால் விட்டுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் கோபிபல்லாப்பூரில் உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற பிரசாரப் பொதுக்கூட்டத்தில் மம்தா பானர்ஜி பேசுகையில்,

நான் மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த ஜங்கிள் மகாலுக்கு செல்ல முயன்றேன். ஆனால் அங்கு போனால் மாவோயிஸ்டுகள் என்னைக் கொல்லப் போவதாக எச்சரித்தனர்.

நான் மாவோயிஸ்டுகளுக்கு சவால்விட்டு சொல்கிறேன்.. உங்களுக்குத் தைரியம் இருந்தால் என்னைத் தொட்டுப் பாருங்கள். எந்த இடத்தில் நீங்கள் என்னைக் கொல்ல



விரும்புகிறீர்கள்? நான் அங்கேயே தைரியமாக வருகிறேன். துப்பாக்கி முனையிலா என்னை அச்சுறுத்த முனைகின்றீர்கள்? 34 ஆண்டுகளாக மார்க்சிஸ்ட்களின் துப்பாக்கி முனைகளுக்கு எதிராக போராடுகிறேன்.

நான் ஜங்கிள் மகாலில் மாவோயிஸ்டுகளுடன் மார்க்சிஸ்ட்டுகள் கை கோர்க்க சதித்திட்டம் தீட்டுகின்றனர். இதை எனது அரசு அனுமதிக்காது என்றார்.

# குவைத்தில் இரத்துச் செய்யப்பட்டது தமிழக இளைஞரின் மரணதண்டனை

குவைத்தில், கொலைக் குறறம் சாட்டப்பட்ட, தமிழகததை சேர்ந்த இருவரின், மரண தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள அவர்களின் பெற்றோர்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

நாகை மாவட்டம், முத்துபேட்டையைச் சேர்ந்தவர் சுரேஷ், 30. கும்பகோணத்தைச் சேர்ந்தவர் காளிதாஸ், 32. இவர்கள் கடந்த, 2008 ஆம் ஆண்டிலிருந்து, குவைத்தில் வேலை செய்து வருகின்றனர்.

கடந்த, 2008 இல், இலங்கையைச் சேர்ந்த பாத்திமா என்ற பெண் கொல்லப்பட்டார். இநதக் கொலை வழக்கில், சுரேஷ், காளிதாஸ், இலங்கையை சேர்ந்த நித்யா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

'இந்த வழக்கில், நித்யாவுக்கு ஆயுள் தண்டனையும், சுரேஷ், காளிதாசுக்கு மரண தண்டனையும் அறிவிக்கப்பட்டது. கடந்த ஏபரல் 18 ஆம் திகதி இவர்களுக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட இருந்தது.

மரண தண்டனையிலிருந்து இவர்களை மீட்கும் படி இருவரது குடும்பத்தினரும், குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்தைக் கேட்டிருந்தனர். இதற்கிடையே, இருவரது மரண தண்டனை திகதி, ஜூன் 16 ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

தூதரக அதிகாரிகளின் முயற்சியினால், பாத்திமா குடும்பத்துடன், தூதரக அதிகாரிகளும், குவைத் அதிகாரிகளும் பேசினர். உரிய இழப்பீட்டை அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டதால், சுரேஷ் மற்றும் காளிதாசின் மரண தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் பாத்திமா



குடும்பத்தினருக்கு, கணிசமான இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதால், சுரேஷ் மற்றும் காளிதாசின் மரண தண்டனை இரத்துச் செய்யப்பட்டு, குறைந்த பட்ச தண்டனை வழங்க, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# அவுஸ்ரேலிய பிரதமராக கெவின்ரூத் நியமனம்



(கான்பெரா)

அவுஸ்ரேலியாவின் புதிய பிரதமராக கெவின்ரூத் நேற்றையதினம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவுஸ்ரேலியாவில் ஜூலியா கில்லார்ட் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தவர் பிரதமர் பதவியை வகித்து வந்தார். அங்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி நாடாளு மன்றத் தேர்தல் நடக்க உள்ளது. இந்த நிலையில் கில்லார்டின் செல்வாக்கு சரிந்து வருகிறது. அவரது தலைமையில் தேர்தலை சந்தித்தால் ஆளும் கட்சிக்கு தோல்வியே கிடைக்கும் என கருத்துக்கணிப்பு தகவல்கள் வெளியாகின

இந்த நிலையில், ஆளும் கட்சி அதிரடியாக பிரதமரை மாற்றி உள்ளது. இது தொடர்பாக நேற்று நடந்த ஆளும் கட்சி வாக்கெடுப்பில் கெவின் ரூத் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு 57 வாக்குகளும், கில்லார்டுக்கு 45 வாக்குகளும் கிடைத்தன.

கெவின் ரூத், கில்லார்டால் ஓரம் கட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கெவின் ரூத் புதிய பிரதமர் ஆகியுள்ள நிலையில், அவர் நாடாளுமன்றத்தேர்தலை முன் கூட்டியே நடத்தும் வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.



விண்வெளிப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு, சீனாவின் இன்னர் மங்கோலியா பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கிய சீன விண்வெளி வீரர்களைக் காணலாம்.

உலகச் செய்திகள்

# வெள்ளை மாளிகைக்குள் நுழைய முயன்ற பெண் கைது



அமெரிக்காவில் போராட்டமொன்றில் கலந்து கொண்ட பெண் ஒருவர் ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்குள் எகிறிக்குதித்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் இரகசிய சேவை தெரிவித்துள்ள இச் செய்தியில், டியானே வில்சன் என்னும் ஒரு பெண், சட்டவிரோதமாக அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகைக்குள் நுழைய முற்பட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து, அமெரிக்க இரகசிய சேவையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், அதிபர் மாளிகைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட 17 பேரில் ஒருவரான டியானே வில்சன், மாளிகையின் வட மேற்கு திசை வழியாக வேலியைத் தாண்டி எகிறிகுதிக்க முயன்றுள்ளார்.

ஒரேஞ்ச் நிறத்தில் உடை அணிந்திருந்த இப்பெண்ணின் இந்த நடவடிக்கையை கண்ட பாதுகாப்பு துறையினர் உடனடியாக அவரை தடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்கள் கியூபாவில் உள்ள குவாண்டனமோ பே பகுதியில் உள்ள அமெரிக்க சிறையில் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் நபர்கள் அடைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அதிகாரியின் கவிதையை புவி கீதமாக அறிவிக்கப் பரிசீலனை




இந்திய தூதரக அதிகாரி எழுதிய கவிதையை, புவி கீதமாக அறிவிக்க, "யுனெஸ்கோ" அமைப்பு பரிசீலித்து வருகிறது. நேபாள தலைநகர், காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகத்தில், செயலராக இருப்பவர் அபய் குமார். இவர் பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ளார். பூமி குறித்து, சமீபத்தில் இவர், கவிதை எழுதியிருந்தார். இந்தக் கவிதை வெளியீட்டு விழா, காத்மாண்டுவில், கடந்த செவ்வாய்க்கிழமை நடந்தது.

இவ்விழாவில் பங்கேற்ற, யுனெஸ்கோ அமைப்பின் நேபாள பிரதிநிதி அலெக்ஸ் பிலாத்தி குறிப்பிடுகையில், ஒவ்வொரு நாட்டுக்கும் தேசிய கீதம் இருப்பது போல, பூமிக்கு எனப் பொதுவான ஒரு கீதத்தை அறிவிக்க உள்ளோம். இதற்கு அபய் குமார் எழுதிய கவிதையை பரிசீலிக்க உள்ளோம்,"என்றார். கவிஞர் அபய் குமார் கூறுகையில், "நீல நிற பூமி, எனக்கு அளப்பரிய அமைதியை அளிக்கிறது. இதற்கு நன்றிக் கடனாக, இந்தக் கவிதையை, பூமித் தாய்க்கு சமர்ப்பிக்க நினைத்தேன். எவ்வளவு தான் வேற்றுமைகள் இருந்தாலும், அனைத்து உயிர்களுக்கும் பொதுவான வீடாக, பூமி உள்ளது. இந்தக் கருத்துத்தான், இந்தக் கவிதையில் அடங்கியுள்ளது, என்றார்.

அபய்குமார் எழுதிய பாடலுக்கு, நேபாள இசையமைப்பாளர்கள், சபன் மற்றும் ஷிரேயா சோடாங் ஆகியோர், இசையமைத்துள்ளனர்.

"சார்க்" நாடுகளின், இலக்கிய விருதை பெற்றவர், அபய் குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரேசிலில் நாய் மனிதன்



நாயின் சாயல் சிறிதளவு இருந்தாலும், நாய்கள் மீது கொண்ட தீரா காதலாலும் ஒரு பிரேசிலிய இளைஞன் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மூலம் தனது முகத்தை நிஜ நாய் போலவே மாற்றிக் கொண்ட விநோதம் நடந்துள்ளது. பெயர் வெளியிடப்படாத பிரேசிலைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு மருத்துவர்கள், இறந்த நாயின் முகத்தைக் கொண்டு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை செய்துள்ளனராம். இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை மருத்துவர்களுக்கு வழங்கியுள்ளாராம் அந்த இளைஞர். இறந்த நாய் ஒன்றின் காது, மூக்கு, வாய் மற்றும் புருவங்களை பிளாஸ்டிக் சத திர சிகிச்சை மூலம் அந்த இளைஞருக்கு பொருத்தியுள்ளார்களாம் மருத்துவர்கள். சத்திர சிகிச்சை முடிவடைந்துள்ள நிலையில் அந்த இளைஞனை நாய் மனிதன் என அழைக்கின்றனர் மக்கள்

# அமெரிக்க இராணுவத்தில் ஆட்குறைப்பிற்கு திட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில், 2017இற்குள், 80 ஆயிரம் வீரர்களை குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதிக செலவினங்களை குறைக்கும் வகையில், அமெரிக்க இராணுவத்தில் ஆட்குறைப்பு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து, அமெரிக்க இராணுவத் தளபதி, ரேமான்ட் ஓடிர்னோ கூறியதாவது: அமெரிக்காவில், நியூயோர்க் உலக வர்த்தக கோபுரம் தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு, இராணுவ வீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில், ஏராளமான இராணுவ வீரர்கள், பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஜேர்மன் நாட்டின், ஏழு பகுதிகளில், 4,500 வீரர்கள் பணியில் உள்ளனர். ஆப்கானிஸ்தானிலிருந்து, ஏராளமான வீரர்கள், அடுத்த ஆண்டு, தாயகம் திரும்ப உள்ளனர். எனவே, இராணுவ செலவைக் குறைக்கும் வகையில், வரும், 2017ஆம் ஆண்டுக்குள், 80 ஆயிரம் வீரர்களை குறைக்க உள்ளோம். இதன் மூலம், தற்போதுள்ள, 5.7 இலட்சம் வீரர்கள், 4.9 இலட்சமாக குறைக்கப்படுவர். இவ்வாறு ரேமான்ட் கூறினார்.

# தொடர்ந்தும் கவலைக்கிடமான மண்டேலாவின் உடல் நிலை



(ஜோகன்னஸ்பர்க்)

தென்னாபிரிக்காவின் தந்தை என்று கருதப்படும் நெல்சன் மண்டேலாவின் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. இதனால், அதிபர் ஜேகப் ஜுமா நேற்றையதினம் மொசாம்பிக் நாட்டுக்கு மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணத்தை இரத்துச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஜுமா, மண்டேலாவை காண வந்தார். அப்போதும் அவர் உடல் நிலையில் தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதால் தனது பயணத்தை இரத்துச் செய்வதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா உடல்நலம் பெற உலகமே பிரார்த்தனை செய்து வருவதாக ஐ.நா., பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார். நியூயோர்க்கில் நடைபெற்ற ஆபிரிக்க கழகத்தின் 50ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட பான் கி மூன், மண்டேலா 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய தலைவர்களில் ஒருவர் எனத் தெரிவித்துள்ளார். நமது எண்ணங்களும் பிரார்த்தனைகளும் மண்டேலாவுடன் உள்ளது அவரது குடும்பத்தினர், அனைத்து தென்னாபிரிக்கர்கள் மட்டுமின்றி உலகின் அனைத்து மக்களும் அவரை நேசிக்கின்றனர் நேர்மையான வாழ்க்கை மற்றும் முன்னுதாரணம் ஆகியவற்றால் அனைவரையும் கவர்ந்தவர் மண்டேலா. இவ்வாறு பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

# நாகர்கோவில் - பருத்தித்துறை தினசரி மூன்று பஸ் சேவை

## விரைவில் ஆரம்பிக்க முடிவு

வடமராட்சி நாகர்கோவிலிலிருந்து மந்திகை ஊடாக பருத்தித்துறை வரையான பேருந்து சேவையை தினந்தோறும் நடாத்துமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மேற்படி விடயம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

அண்மையில் அம்பன் பகுதி மக்கள் நாகர்கோவிலிலிருந்து மந்திகையூடாக பருத்தித்துறைக்கான பேருந்து சேவையின் அவசியம் குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இது விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர், தனியார் ஊடாக குறித்த சேவையை மேற்கொள்ளும் வகையில் அதற்கான பொலிஸாரின் அனுமதியையும் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இப் பேருந்து சேவையினை தொடரும் வகையில் குறித்த பாதையூடான போக்குவரத்தை வடமராட்சி கிழக்கு தனியார் பேருந்து சங்கத்துடன் இணைந்து முன்னெடுக்க வேண்டுமென்றும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மைகருதி நாளொன்றுக்கு மூன்று தடவைகள் இச் சேவைகள் இடம்பெற வேண்டுமென்றும் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளர் ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) ஆகியோர் உடனிருந்தனர்.

# முதியோருக்கான சுற்றுலா முதியோர் இல்லம் ஏற்பாடு

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கிவாழும் 35 பேர் மிருசுவில் கிறிஸ்தவ ஆலயம் மற்றும் நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயம் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இல்ல அத்தியட்சகரின் அனுமதியுடன் இல்ல உத்தியோகத்தரினால் இவ்வாலயத் தரிசனத்துக்காக இவர்கள் அழைத்துச் செல்லப்படும் போது இவர்களுக்கான மன ஆற்றுப்படுத்துகையை மேற்கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது.

காலை 9.00 மணிக்கு அழைத்துச் செல்லப்படும் இம் முதியவர்கள் மாலை வரை ஆலயத் தரிசனத்தை முடித்துக்கொண்டு மீண்டும் மன ஆறுதலோடு இல்லத்துக்குத் திரும்புவார்கள்.

ஏற்கனவே வேறு பல சுற்றுலாக்களுக்கும் இவ் இல்ல முதியவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இப்படியான தரிசனங்கள், சுற்றுலாக்கள் போன்றவற்றினால் இவர்களது மனதில் மிகுந்த உற்சாகமும், மகிழ்ச்சியும் ஏற்படுவதாக இல்ல அத்தியட்சகரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# சிறைக்கைதிகளுக்கு விமோசனம் துரித விசாரணைக்கு உத்தரவு

வழக்கு விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயார் செய்யுமாறு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார.

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கும் மேலாக விசாரணைகள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழுவினால் நேற்று ஆராயப்பட்டபோதே பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். அந்த மனுதாரரின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, இவ்வாறு வருடக் கணக்கில் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்படுவது அரசியலமைப்பை மீறும் செயல் என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இவ்வாறு விசாரணைகள் இன்றி வருடக்கணக்கில் ஆட்களை தடுத்து வைப்பதை அனுமதிக்க முடியாது என்று கூறியதுடன் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல் அல்லது விடுதலை செய்தல் குறித்து சட்டமா அதிபர் துரித முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அல்லது அவர்களை விடுதலை செய்வதற்கான ஒரு துரித திட்டத்தை தயாரிக்குமாறும் அவர் உத்தரவிட்டார். இதன் முதற்கட்டமாக போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பல காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பட்டியலை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.அதனைப் பரிசீலித்து தான் அவர்களுக்கு வழக்குத் தாக்கல் செய்வதா அல்லது அவர்களை விடுதலை செய்வதா என்பது குறித்து முடிவு எடுக்கவுள்ளதாகவும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

# காரைநகரில் விரைவில் உப பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் உப பொலிஸ் அலுவலகம் ஒன்று மிக விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அத்துடன் மக்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளைக் கவனித்துக்கொள்ளவும் மற்றும் திருட்டு, சட்டவிரோத சம்பவங்களையும் உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் துரிதமாகப் பொலிஸார் செயற்படுவதற்காகவும் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு மூன்று மோட்டார் சைக்கிள்களை பெற்றுத்தருவதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக்களின் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை, மண்டைதீவு, பொன்னாலை, காரைநகர் போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸார் விரைந்து செயற்பட வசதிகள் குறைவு என தெரிவிக்கப்பட்டதற்கு அமையவே அமைச்சர் பொலிஸாருக்கு மோட்டார்களை பெற்றுத்தருவதாக தெரிவித்தார்.

அதேவேளை காரைநகர் பிரதேசத்திற்கு உப பொலிஸ் அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கான கட்டட வசதிகளைப் பிரதேச செயலர் ஏற்படுத்தித் தருவதாகத் தெரிவித்ததையடுத்து அமைச்சர் அங்கு உடன் அவ் உப நிலையத்தை ஏற்படுத்துமாறு பணித்தார். இதன்மூலம் காரைநகர் பகுதியில் தற்போது இடம் பெற்றுவரும் குற்றச் செயல்களைத் தடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பௌத்த பிக்குகள் திரண்டு பேரணி நடாத்த திட்டம்

13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி 10 ஆயிரம் பிக்குமார் கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தவுள்ளனர். 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி சுமார் 10 ஆயிரம் பிக்குமார் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர் என கொழும்பில் இருந்து குளோபல் தமிழ்ச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும் இருந்து பிக்குகளும் பிக்கு மாணவர்களும் கொழும்புக்கு சென்று ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்துகொள்வார்கள் என்றும் 25 இற்கும் அதிகமான பௌத்த அமைப்புகள் ஆதரவு வழங்குவதாகவும் கொழும்பில் நேற்று இடம்பெற்ற பௌத்தபிக்குகளின் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அலரிமாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆர்ப்பாட்டக்காரர்கள் சந்திப்பார் எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நேற்றுப் பிற்பகல் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்தித்த பிக்குமார் சிலர் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டாம் என கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

### குறைகேள்...

தீர்வுகாண உரிய அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு இப்பிரிவினூடாகத் தகவல்கள் வழங்கவுள்ளோம். இப் பிரிவு யூலை முதலாம் திகதி திறக்கப்படவுள்ளது. இதில் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கான தீர்வினை உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். யாழ். செயலகத்திலே இப் பிரிவு செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### பாக். இராணுவத்...

ஜயசூரியவின் விஷேட அழைப்பை ஏற்று வருகைதந்த ஜெனரல் கயானி இலங்கையின் முக்கிய இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் இன்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவையும் சந்திக்க உள்ளார்.

அத்துடன் தியத்தலாவ இராணுவ பயிற்சி முகாமில் நடைபெறவுள்ள விஷேட நிகழ்வுகளில் கலந்துகொள்ள உள்ளார். நாளை சனிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கும் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் கயானி, இலங்கையின் முக்கிய படைத்தளங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேசுவார்.

### கலாசார...

முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி மற்றும் மாவட்டத்திலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், நகரசபை முதல்வர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

அண்மைக் காலமாக சிவில் சமூகங்கள் எதிர்நோக்குகின்ற சமூக, கலாசார பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணும் வகையில் விடயங்கள் ஆராயப்பட்டன. பிரதேச ரீதியில் உள்ள முறைப்பாடுகள், மற்றும் குறைபாடுகளைக் களை பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், இவ்வாறான மாவட்ட ரீதியான கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி அடுத்த கூட்டம் இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டது. நண்பகலுடன் இச்சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நிறைவடைந்தது. (இ)

### பஸ்கட்டண...

இல்லை. இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், அகில இலங்கை பேருந்து நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் மாகாண பேருந்து உரிமையாளர் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். தனியார் போக்குவரத்து அமைச்சில் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இந்த பேச்சு வார்த்தையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் அவர்களது நிலைப்பாட்டை தெரிவித்தனர்.

இதற்கு மேலும் இரண்டு நாள் அவகாசத்தை தாம் கோரியதாக தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ.பி.ரத்ணாயக்க தெரிவித்தார். இதனிடையே, பேருந்து கட்டணங்கள் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### அதிகாரங்கள்...

நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சர் கட்சியின் நிலைப்பாட்டுக்கு இணங்கியதாக வெளியான செய்தி தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நிலைப்பாட்டை தான் ஏற்கவில்லை எனவும் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வழங்குவது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் பகிரங்கமாக அது குறித்து பேசுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் நாட்டில் அதிகாரத்தை பரவலாக்காமல் ஆச்சரியமான அபிவிருத்தியை நோக்கி நாட்டை இட்டுச் செல்லமுடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தெரிவுக்குழு...

என லங்கா சமசமாஜ கட்சியின் பிரதிச் செயலாளர் அனில் டி சொய்சா அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகள், தெரிவுக்குழுவில் இடம்பெற செய்யப்பட்டுள்ள போதிலும் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் புறந்தள்ளப்பட்டுள்ளன. இது பாரிய அநீதியாகும். இது அரசாங்கத்தில் உள்ள இனவாத சக்திகளின் அழுத்தங்கள் காரணமாக வேண்டுமென்றே செய்யப்பட்டது எனவும் அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் கிளிநொச்சியில் மீளாய்வு



கிளிநொச்சிமாவட்டத்தில், பிரதேசசபைகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் நேற்று ஆராயப்பட்டது.

'நெல்சிப்' திட்டத்தின்கீழான நிதியிலும் மற்றும் மாகாணகுறித்தொதுக்கப்பட்ட அபிவிருதிக்கான நிதி மற்றும் யுனிசெப் நிதி ஆகிய வற்றின் மூலம் உள்ளூராட்சித்திணைக்களத்தின் கீழ் பிரதேசசபைகளினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக மு.சந்திரகுமாரினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்சிப் திட்டத்தின்கீழ் தொடரும் மூன்று ஆண்டுகளை உள்ளடக்கிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தும் திட்டங்களுக்காக 339 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அந்நிதியில் 2011 இல் 30 வீதமும், 2012 இல் 45 வீதமும் 2013ஆம் ஆண்டில் 25 வீதமும் மாக பிரித்து வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை முடிவடைந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் பெறுபேறுகள் தொடர்பாகவும் மற்றும் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரால் விரிவாக ஆராயப்பட்டது.

இத்திட்டத்தில் கரைச்சி பிரதேசசபைக்குட்பட்டபகுதிகளில் 2011ஆம்ஆண்டில் 120 மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டங்களும் 2012 இல் 36 மில்லியன் ரூபா செலவிலான வேலைத்திட்டங்களும் 2013 ஆம் ஆண்டில் 30 மில்லியன் ரூபா செலவிலான வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அத்தோடு பச்சிலைப் பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் 2011 இல் 116 மில்லின் ரூபா பெறுமதியிலும் 2012ல் 35 மில்லியன் ரூபா பெறுமதியிலும் 2013 இல் 29 மில்லியன் ரூபா செலவிலும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பூநகரியில் 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் முறையே 103 மில்லியன், 31 மில்லியன் 46 மில்லியன் ரூபா செலவுகளில் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நடைமுறையில் உள்ள வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வேலைத்திட்டங்களையும் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்து திட்டங்களின் பயன்களை மக்களுக்கு விரைவாக வழங்கவேண்டும் எனவும் பிரதேசசபையினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பணிப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில், பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையைச் சேர்ந்த விமலநாதசர்மா, கரைச்சி பிரதேசசபையின் செயலாளர் எஸ்.கிருஸ்ணகுமார், பூநகரி பிரதேசசபையின் செயலாளர் மேரிமெற்றலின், பச்சிலைப் பள்ளி பிரதேசசபையின் செயலாளர் சிவப்பிரகாசம் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதில் பிரதேசசெயலகங்களின் தொழிநுட்ப உத்தியோகஸ்த்தர்கள் ஒப்பந்தகாரர்கள் உள்ளூராட்சித்திணைக்களங்களின் அதிகாரிகள் அலுவலர்கள் எனப பலரும் கலந்துகொண்டனர்.



சுன்னாகம் போக்குவரத்து பொலிசாரினால் நேற்று நண்பகல் டேலையிற் இல்லாது செல்லும் சையிக்கிள்களுக்கு சிவப்பு நிறத்திலான டேலையிற் போன்ற இரவில் ஒளிக்கக் கூடிய ஸ்ரிக் கேர்ஸ் ஒட்டப்பட்டன.

## தன்சானியாவில் ஜனாதிபதி



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தன்சானியாவைச் சென்றடைந்துள்ளார். ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு ஜனாதிபதி தன்சானியா சென்றுள்ளார். இதனையடுத்து சிசெல்ஸிற்கும் அவர் செல்லவுள்ளார். இந்த இரு நாடுகளுக்கும் இலங்கையின் ஜனாதிபதி ஒருவர் முதன் முறையாக விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது.

# கதையாடல் கண்காட்சி இன்றும், நாளையும்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாய்மாரின் சோகக்கதைகளின் கதையாடல் கண்காட்சி ஒன்று இன்றும், நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் மேற்படி இரு தினங்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இக் கதையாடல் கண்காட்சி இடம்பெறவிருக்கிறது.

ஆர்வமுள்ளவர்கள் பங்கு கொள்ளலாமென்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கௌரவமான அரசியல் தீர்வை இந்த அரசு தராது



(கொழும்பு)

கௌரவமான அரசியல் தீர்வை இந்த அரசாங்கத்திடமிருந்து தமிழ்மக்கள் எதிர்பார்க்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

வட மாகாண மக்களுக்கு மாத்திரம் மாகாண சபை அதிகாரங்களையும் உரிமைகளையும் அனுபவிக்க விடக்கூடாது என்பதற்காகவே அரசாங்கம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டம் இந்தியாவினால் பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றல்ல. அப்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து தரப்பினர்களுடனான உள்ளக பேச்சுவார்த்தையின் வெளிப்பாடே இந்த மாகாண சபை முறைமையும் 13ஆவது திருத்தச் சட்டமும் ஆகும். ஆனால் அரசாங்கம் இதனை திரிபுபடுத்தி பிரசாரம் செய்கிறது

சர்வதேச சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் இந்தியாவிடமும் 13ஆம் திருத்தத்திற்கு மேலாக சென்று அதிகார பரவலாக்கம் செய்வதாக வாக்குறுதி அளித்த அரசாங்கம் இன்று அதற்கு எதிராக செயற்பட முனைகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் உள்ளடக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் இல்லை. இந்நிலையில் அரசாங்கம் யாரிடம் கலந்தாலோசிக்க உள்ளதென்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

ஆளும் கட்சி தங்களுக்குள்ளே கலந்தாலோசித்து 13ஆம் திருத்தம் தொடர்பிலான முடிவுகளை எடுப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு அவசியமற்ற ஒன்றாகும். அரசாங்கம் 13ஆம் திருத்தத்தின் வீரியத்தை குறைப்பதற்கு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டில் மக்கள் பல பகுதிகளிலும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அரசாங்க கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் என்போர் இது தொடர்பில் குரல் எழுப்பியுள்ளமை வரவேற்கத் தக்கதாகும். அரசாங்கத்தின் இப் பிற்போக்குத்தனத்தினை சுட்டிக்காட்டி திருத்த வேண்டியது அவசியமாகும். ஆதலால் அனைவரும் இது தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 25 வருடமாக ஏனைய மாகாணங்களில் மக்கள் அனுபவித்த மாகாண சபை முறைமையை தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வடக்கில் மாத்திரம் வேண்டாம். இல்லாது செய்ய வேண்டும். தேவையற்றது என அரசாங்கம் கூறுவது தமிழ் மக்களின் உரிமைகளை கேள்விக் குறியாக்குவதோடு அரசாங்கத்தின் பிற்போக்கான சிந்தனையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமிழர்கள் "எவ்வாறு கௌரவமான அரசியல் தீர்வு ஒன்றை தற்போதைய இலங்கை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மாகாண சபை உறுப்பினர் இருவர் இடைநிறுத்தப்பட்டனர்

(கொழும்பு)

மாகாண சபை உறுப்பி னர்கள் இருவரை இடைநிறுத்திவைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வட மேல் மாகாணசபை உறுப்பினர்கள் இருவரையே கட்சியிலிருந்து இடைநிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரீ.ஹசன் அலி தெரிவித்தார்.

புத்தளத்தை சேர்ந்த எஷியா ஆப்தீன் மற்றும் குருநாகலை சேர்ந்த றிஸ்வி ஜவகர்ஷா ஆகிய இரண்டு உறுப்பினர்களே இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.13ஆவது திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவதற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பிலான பிரேரணை வட மேல் மாகாண சபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குறித்த இரண்டு உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். இதனையடுத்தே இவர்களை உடனடியாக கட்சியிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்தார்.

இந்த இடைநிறுத்தம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அவர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு இந்த இரண்டு உறுப்பினர்களும் அரசாங்கத்தினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என ஹசன் அலி தெரிவித்தார்.அத்துடன் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காவிட்டால் உங்கள் இருவருக்குமான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படும் என மாகாண ஆளும் கட்சியின் உயர் பதவியிலுள்ள ஒருவர் அவர்களை அச்சுறுத்தியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.


## உடனடி வேலைவாய்ப்பு

தினமுரசு காரியாலய இயந்திரப் பகுதியில் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

SORD, KORD அச்சு இயந்திரங்களை இயக்கக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விருப்பமுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்

இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

அச்சக முகாமையாளர்
தினமுரசு


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.